# பாட்டாளி சிந்தனை

Volume 24 No. 11

July 2014

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


### வாழ்நாள் புரட்சியாளர்

# தோழர் யாகூப் பைலான் அவர்களுக்கு செவ்வணக்கம்

## எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டியின் அஞ்சலி

“தேவையான அளவிற்கு உயர்ந்த கலாச் சாரத்தரத்தை எய்தாமல் அதாவது பாட்டாளி வர்க்க கலாச்சார தரத்தை அடையாமல் ஒருவ ரால் புரட்சியின் கருத்தியலை சரிவர உட் கிரகிப்பதோ அதை மதிப்பிடுவதற்கான திறமையை பெறுவதோ இயலாது. எனவே தான் புரட்சிகர அரசிலை சரியாக பிரயோ கிப்பது அல்லது திறம்பட அமல்படுத்துவது என்பது வெகுஜனங்களின் புரட்சிகர போராட் டங்களில் பல லட்சக்கணக்கானோரை ஈடு படுத்துவதன் மூலம் புரட்சிசார்ந்த வாழ்க் கையையே கொண்டுவருவது ஆகும்”. நமது கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபக பொதுச்செயலாளரும் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் இக்கால கட்டத்தின் மாபெரும் மார்க்சிய சிந்தனை யாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனையாகும் இது. தோழர் யாகூப் பைலான் அவர்கள் இப் போதனையை தனது வாழ்நாள் முழுவதும் உயிர்த்துடிப்புடன் வைத்திருந்தார். புரட்சி யையும் புரட்சிகர வாழ்க்கையையும் தனது வாழ்க்கை லட்சியமாக அவர் ஏற்றுக் கொண்டார். 1948ல் கட்சி நிறுவப்பட்ட தொடக்க காலத்திலேயே கட்சியின் முதல் மத்திய கமிட்டியினுடைய உறுப்பினர்களான மறைந்த தோழர்கள் சச்சின் பானர்ஜி சுபோத் பானர்ஜி ஆகியோரின் தொடர்பு 1949ல் அவருக்கு ஏற்பட்டது. அது முதலாகவே மார்க்சிசம் லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனையால் ஈர்க்கப்பட்டு கட்சியில் இணைந் தார். அதன்பின் அவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களோடு நெருங்கிய தொடர்பில் வந்தார். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர் களோடு விவாதங்களில் ஈடுபட்டதில் மார்க்சிசம் லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனை மட்டுமே சுரண்டலிலிருந்து விடுதலைபெற வல்லது என்பதை உணர்ந்தார்.

தோழர் யாகூப் பைலான் ஏழை விவசாய குடும்பத்திலிருந்து வந்தவர். தனது குழந்தைப் பருவத்திலும் இளம்பருவத்திலும் அவர் வறுமையில் வாழ்ந்த காரணத்தால் அவருக்கு முறையான கல்வி பயிலக்கூடிய வாய்ப்பு கிட்டவில்லை. ஆனால் கட்சியில் இணைந்த பிறகு புரட்சிகர கருத்தியலை உட்கிரகிக்காமல் புரட்சியாளராக உருவாவதென்பது இயலாத காரியம் என்ற உண்மையை அவர் உணர்ந்தார். அதே சமயம் உண்மையான அறிவென்பது ஆக்கபூர்வமானது என்பதையும் அவர் உணர்ந்தார். எனவே கட்சியின் தலைமை மற்றும் தத்துவம் வழிகாட்டியபடி தன்னை

தொடர்ச்சி 2ம் பக்கம்



# பெண்களுக்கு எதிராகப் பெருகிவரும் குற்றங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவீர்

உலகின் ‘மிகப்பெரிய ஜனநாயகம்’ பெண் களுக்கு வழங்குவது இதைத்தானா? கேலி செய்தல், பாலியல் துன்புறுத்தல், தாக்குதல், அமில வீச்சு, உடலை நாசமாக்குதல், பொதுமக்கள் பார்க்க பட்டப் பகலில் துகிலுரிதல், பாலியல் பலாத்காரம், கூட்டு பலாத்காரம், அதற்கும் மேல் கொலை மற்றும் கௌரவக் கொலை – போன்றவை இன்று அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. வெளியே சென்றிருக்கக் கூடிய தங்கள் வீட்டுப்பெண் அல்லது பெண் குழந்தை பத்திரமாக திரும்பி வருமா, வழியில் கேலி கிண்டலுக்கு ஆளாகுமா, தெரியாதவர்களின் தாக்குதலுக்கு ஆளாகுமா, அல்லது எல்லாவற்றிற்கும் மேலாக பாலியல் வன்முறைக்கு பலியாகுமா என்ற அச்சத்தில் ஒவ்வொரு கணவனும் சகோதரனும் தந்தைமார்களும் ஏன் மகன்களும்கூட எப்போதும் ஒரு பீதியிலேயே உள்ளனர். இத்தகைய குரூரமான தாக்குதல்களும் வன்முறைகளும் பெருநகரங்களில், நகரங்களில், கிராமங்களில், பழங்குடியினர் பகுதி களில், மாநகரங்களில் என எங்கும் நடக்கிறது. படித்தவர், படிக்காதவர், பச்சிளம் குழந்தை, பள்ளி செல்லும் சிறுமியர், வயது முதிர்ந்த பெண்கள் என யாரும் இதற்குத் தப்பவில்லை. 21 ஆம் நூற் றாண்டு ‘நவீன’ இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பு என்பது வெற்று வார்த்தை ஜம்பமாக ஆகிவிட்டது.

2012யில் டெல்லியில் நிர்பயா கொடூரமான பாலியல் வன்முறைக்கு ஆளாகி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நியாயமாக எழுந்த நாடுதழுவிய வேதனை உணர்ச்சியும் கிளர்ச்சியும் கும்பகர்ணன்போல் தூங்கிக்கொண்டிருந்த ஆட்சியாளர்களை தற் காலிகமாக உலுக்கியது. இத்தகைய கொடூரமான குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்காக சில புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அதோடு முன்பைக்காட்டிலும் சில வழக்குகளில் விரைவான விசாரணையும்கூட நடைபெற்றது. ஆனால் ஆட்சி யாளர்களின் உறுதிமொழிகள் வெற்று வார்த்தை களாய்ப் போயின. சட்டங்கள் புத்தகங்களிலேயே தூங்குகின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைந்தபாடில்லை. மாறாக படுவேகமாக அதிகரித்து வருகின்றன. அதுமட்டுமல்ல அக்குற்றங்களின் தன்மையும் மிக மோசமான வகையில் சென் றுள்ளன. இவற்றைப் பார்க்கும்போது நாம் நாகரீக சமுதாயத்தில்தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம் எழுகிறது. கடந்த சில வாரங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெண்களுக்கு எதிராக மிக மோசமான குற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அச்சம்பவங்களின் காட்டுமிராண்டித்தனம் ரத்தத்தை உறையவைக்கும் தன்மை ஆகியவை ஒன்றை ஒன்று மிஞ்சுவதாக உள்ளன.

### உத்திரப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற சம்பவங்கள்

இதில் முதல் சம்பவம் உத்திரப்பிரதேசம் மாநிலத்தின் பத்வானில் நடைபெற்றது. அங்கே கடந்த மே 27 இல் இரண்டு இளம் தலித் பெண்கள் கடத்தப்பட்டு, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு பின்னர் மிகவும் கொடூரமான முறையில் கொல்லப் பட்டு, மரத்தில் தூக்கில் தொங்கவிடப்பட்டனர். அதன் பின்னர் சரியாக ஒரு வாரம் கழித்து அதே உ.பி.யில் சிட்டாபூரில் மற்றொரு மைனர் சிறுமி அதேபோன்று பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு ஒரு மரத்தில் பிணமாகத் தொங்கவிடப்பட்டாள். சித்ராகூட்–இல் உள்ள பைசோன்டா கிராமத்தில், ஒரு மைனர் சிறுமியை பாலியல் துன்புறுத்தல் செய்ய முன்னா என்ற இளைஞர் முயற்சித்தபோது அக்கிராமத்தைச் சேர்ந்த ஒழுக்கமும் தைரியமும் நிறைந்த பூரி தேவி என்ற வயதான தலித் பெண்மணி தனது முழு சக்தியையும் பயன்படுத்தித் தடுத்து நிறுத்தினார். அதற்காக அவரை அந்த இளைஞர் அடித்தே கொன்றார். எட்டாவாவில் உள்ள கௌரபூர் என்ற இடத்தில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில், இரண்டு நாட்களுக்கு முன்பு தனது மகளைக் கற்பழித்ததற்காக சன்னி, பசட்லால் யாதவ் என்பவரது மகன், மீது காவல்துறையில் தான் அளித்த புகாரை திரும்பப்பெற மறுத்ததால் அப் பெண்ணின் தாயார் வெட்டவெளிச்சத்தில் அதே குற்றவாளிகளால் துகிலுரியப்பட்டாள். சமாஜ்வாதி கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவின் பாராளு மன்றத்தொகுதியான அசம்காரில் 15 வயது இளம் பெண் 4 பேரால் கூட்டுப் பலாத்காரம் கற்பழிப்பு செய்யப்பட்டாள். அலிகாரில் ப்ரொவின்சியல் ஆயுதக் காவல்படைப் பிரிவின் 24 மணிநேர கண் காணிப்பில் இருக்கும் பகுதியில் வசிக்கும் கூடுதல் சிவில் பெண் நீதிபதியின் வீட்டிற்குள் இருவர் அத்துமீறி நுழைந்து, ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த அவரை பாலியல் பலாத்காரம் செய்ய முயன் றுள்ளனர். எதிர்த்துப் போராடியதால் அவரை கத்தியால் குத்தி, தப்பிப்பதற்காக அவரது வாயில் பூச்சிக்கொல்லி மருந்தை ஊற்றியுள்ளனர். மொரதா பாத்திலும் ஒரு 19 வயது இளம் பெண் சந்தேகத் திற்கிடமான முறையில் ஒரு மரத்தில் தூக்கில் தொங் கினார். ஆனால் அது தற்கொலை என்பதற்கான முகாந்திரங்கள் இருப்பதாக காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். மீரட்டில் தலித் இளம்பெண் ஒருவர் இளைஞரால் கடத்தப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். வார ணாசியில் உள்ள மண்டுவாடி பகுதியில் மனநிலை பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் கடத்தப்பட்டு இரண்டு பேரால் கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப் பட்டுள்ளார். ஜூன் 10 அன்று ஜலாஉன்–இல் கடஉரா பகுதியில் 15 வயது சிறுவன் ஒருவன் 6 வயது சிறுமியை பாலியல்ரீதியாகத் துன்புறுத்தியதாக ஒரு காவல்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். ஹமிர்பூர் காவல்நிலையத்தில் கைதியாக உள்ள தனது கணவரை விடுதலை செய்வதற்காகச் சென்ற 24 வயது இளம்பெண், உதவி ஆய்வாளர் அந்த

தொடர்ச்சி 6ம் பக்கம்

# எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டியின் அஞ்சலி

*1ம் பக்கத் தொடர்ச்சி*

ஒரு புதிய மனிதராக அதவாது ஒரு கம்யூனிஸ்ட் புரட்சியாளராக மறுவார்ப்பு செய்துகொள்வதற்கான போராட்டத்தை துவக்கினார். இதன் மூலம் பழங்கால கிராமப்புற வாழ்வின் பிற்போக்கு சிந்தனைகளிலிருந்தும் பழமையான கோட்பாடுகள், கிராமப்புற பழக்கவழக்கங்கள் தார்மீக ஒழுக்கம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு கம்யூனிஸ்ட் புரட்சியாளராவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டார்.

அந்நாட்களில் மேற்குவங்கத்தின் சுந்தரவனப் பகுதியில் கிராமப்புற பெரும் விவசாயிகளும் நிலச்சுவான்தார்களும் கோலோச்சி வந்தனர். அவர்களது யதேச்சாதிகார போக்கால் குத்தகை விவசாயிகள் எப்போதும் அச்சத்திலேயே காலங்கழித்தனர். இந்த ஏழை குத்தகைதாரார்களுக்கு எதிர்க்கத் துணிவில்லை. குத்தகை விவசாயிகளுக்கு சேர வேண்டியதை தராமல் மறுத்தும் கூலி கொடுக்காமல் வற்புறுத்தி உழைக்க வைத்தும் அவர்களை பயமுறுத்தியும் அடக்கி ஒடுக்கியும் பெரும் நிலச்சுவான்தார்கள் சுரண்டி வாழ்ந்து வந்தனர். மீன்வளர்ப்பிற்கு பயன்படுத்துவதற்காக விவசாய நிலத்தில் ஆற்றின் உவர் நீரை பாய்ச்சி பயிர்த்தொழிலுக்கு லாயக்கற்றதாக ஆக்கி அதன் மூலம் வறுமையால் பீடிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வை நாசமாக்கினர். தோழர்கள் சச்சின் பானர்ஜி சுபோத் பானர்ஜி ஆகியோரின் தலைமையில் இந்த ஏழை விவசாயிகளை அணிதிரட்டி தோழர் யாகூப் பைலான் போராட்ட இயக்கங்கள் கட்டினார். மணி ஆற்றின் கரையோரங்களில் மீன்வளர்ப்பு எதிர்ப்பு இயக்கங்களை வளர்த்தெடுத்த முன்னணி தலைவர்களில் தோழர் யாகூப் பைலானும் ஒருவராவார். 1950களின் துவக்கத்தில் மேற்கு வங்கத்தின் தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டம் முழுதும் பரவி உக்கிரமாக வளர்ந்த இயக்கமாகிய வரலாற்றுச் சிறப்புமிக்க தேபகா இயக்கத்தின் (குத்தகை விவசாயிகளிக்கு உரிமையான மூன்றில் ஒரு பங்கு விளைச்சலை அவர்களுக்கு உத்தரவாதப்படுத்திய இயக்கம்) சக்திவாய்ந்த தலைவராகவும் அவர் திகழ்ந்தார். இவ்வியக்கம் போர்க்குணமிக்க இயக்கமாக வளர்ந்து மாபெரும் வெற்றியீட்டி வரலாற்றுச் சிறப்பான இயக்கமாயிற்று.

மேற்கு வங்க மாநில விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள் இயக்கத்தின் தலைவராக பிரபலமடைந்தவர் தோழர் யாகூப் பைலான் ஆவார். அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் கூட்டமைப்பின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளருமாக விளங்கியவர். விவசாயிகளின் ஈர்ப்பு மையமாக அவர் விளங்கிய அதே வேளையில் சுயநல விஷமிகளுக்கு பெரும் உறுத்தலாகவும் அவர் திகழ்ந்தார். அதனால்தான் சுயநலங்கொண்டோர் அவர் மீது திரும்பத்திரும்ப தாக்குதல்கள் நடத்தினர். வயதான காலத்தில்கூட அவர் அத்தகைய உடல் ரீதியான தாக்குதல்களுக்கு ஆளானார். சதாரண ஏழை மக்களுடைய போராட்டங்களை ஒடுக்குவதற்காக நிர்வாகமும் போலீசும் அவர் மீது திரும்பத் திரும்ப குறிவைத்து தாக்கி அவரை சித்திரவதைக்குள்ளாக்கியது. பலமுறை அவரை கைது செய்தது. 1959ல் உணவு இயக்கத்தின்போதும் அதன்பின் விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் போராட்டங்களின்போதும் அவர் பலமுறை சிறைவாசம் அனுபவித்தார்.

இவ்வாறாக சமரசமற்ற முறையில் ஓய்வொழிவின்றி போராட்டங்கள் நடத்தியதன் விளைவாக தோழர் யாகூப் பைலான் மிக உயர்ந்த கம்யூனிச புரட்சிகர பண்புகளை அடைந்தார். அவரோடு தொடர்பு ஏற்பட்ட எவரும் அவரால் மிக ஆழமாக ஈர்க்கப்பட்டனர். ஏழை பாமர மக்கள் மட்டுமல்லாது தனது புரட்சிகர வாழ்வில் அவர் பிரதிபலித்த மிக உயர்ந்த தரத்தின் காரணமாக உயர்கல்வி கற்ற சான்றோர்கூட அவரால் காந்தமென ஈர்க்கப்பட்டனர். இவர்களில் பலர் பின்னாளில் தலைவர்களாக ஆர்கனைசர்களாக கட்சித்தொண்டர்களாக உருவாயினர். இத்தகைய கடுமையான உதாரண போராட்டத்தின் விளைவாக அவர் தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தின் செயலாளராகவும் மேற்கு வங்க மாநில கமிட்டி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1988ம் ஆண்டு நடந்த கட்சியின் முதல் காங்கிரசில் கட்சியின் ஸ்டாஃப் உறுப்பினர் அந்தஸ்து கொடுக்கப்பட்டது. அப்போது அவர் கட்சி கன்ட்ரோல் கமிஷன் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2009ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது கட்சி காங்கிரசில் மத்திய கமிட்டி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு கன்ட்ரோல் கமிஷன் உறுப்பினராகவும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் யாகூப் பைலான் மிகவும் பாசமிக்க தோழர். ஏழை பாட்டாளி மக்கள் பால் அவர் அளவிலா அன்பு கொண்டிருந்தார். தனது வாழ்நாள் முழுவதையும் அவர்களுடனேயேதான் அவர் கழித்தார். ஏழை மக்கள் மீது அவர் வெளிப்படுத்திய அளப்பரிய அன்பும் தோழர் சிப்தாஸ் கோஷின் புரட்சிகர போதனைகளை ஓய்வொழிவின்றி தனது சொந்த வாழ்வில் பிரயோகித்து செழிப்பூட்டிய வாழ்க்கை போராட்டமும் அவரை மிக உயர்ந்த தரமுடைய புரட்சிகர தலைவராக உருவாக்கி கட்சித் தலைவர்கள் தொண்டர்கள் மக்கள் மனங்களில் அவருக்கென நீங்கா இடம் பிடித்துத் தந்துவிட்டது. அவர் கட்சி அலுவலகத்திலும் கட்சி மையத்திலும்தான் வாழ்ந்தார். தனக்கென்று சொந்தமாக அவரிடம் எதுவும் இல்லை. வாழ்க்கை போராட்டத்தின் மூலம் தனது சொந்த வாழ்க்கை முழுமையையும் கட்சியோடும் புரட்சியோடும் ஒன்றரக் கலக்கக்கூடிய நிலையை அவர் எய்திவிட்டார். இந்தப் போக்கில் உயர்ந்த தரமுடைய வாழ்முறை புரட்சியாளராக அவர் உயர்ந்தார்.

தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களுடைய புரட்சிகர போதனைகளின் அடிப்படையில் ஒரே மனிதனைப்போல் நின்று ஏழை விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களின் இயக்கங்களிலும் ஜனநாயக வெகுஜன இயக்கங்களிலும் அவரது மறைவால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவோம் என்று சபதமேற்கிறோம்.

# தோழர் யாகூப் பைலான் மக்கள் மனங்களில் என்றென்றும் வாழ்வார்

இன்று யாருடைய மறைவை எண்ணி ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் உகுக்கின்றனரோ அந்த மனிதர் என்றுமே ஊடகங்களால் பேசப்படவில்லை. மேற்கு வங்கத்தின் தெற்கு 24 பர்கானா மாவட்டத்தின் பல பத்தாயிரக்கணக்கான ஏழை விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்திருப்பவர் இந்த மாபெரும் புரட்சியாளர். தங்களுக்கு மிகவும் நெருக்கமான தங்களால் பெரிதும் மதிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டு ஆழமாக நேசிக்கப்பட்ட ஒருவரது மறைவையொட்டி இன்று இவர்கள் அனைவரும் ஆழ்ந்த வேதனையோடும் வருத்தத்தோடும் துக்கப்படுகின்றனர். சற்றும் பிரபலமடையாத யாரும் கேள்விப்படாத ஒரு மனிதர் ஒரு காலத்தில் கிராம சந்தைகளில் அரிசி விற்றுக்கொண்டும் தையல்காரராகவும் இருந்த மனிதர் முறையான கல்வி ஒன்றும் பயிலாத மனிதர் இத்தனை பேருடைய மனங்களை எவ்வாறு கொள்ளை கொள்ள முடிந்தது? இத்தகைய உயரத்தை அடைவதற்கு அவரை வழிநடத்தியது எது அவருக்கு சக்தியளித்தது எது?

இந்த அடிப்படையான கேள்வியை சரிவர புரிந்துகொள்வதில்தான் தோழர் யாகூப் பைலான் அவர்களுடைய புரட்சிகர வாழ்வின் சரியான புரிதல் அடங்கியுள்ளது. அவ்வாறு புரிந்து கொள்ளும்போதுதான் அவரது வாழ்விலிருந்து தகுந்த போதனைகளை நம்மால் பெற முடியும். ஒரு உண்மையான புரட்சியாளரின் மனதில் முன்பின் தெரியாத லட்சக்கணக்கான ஏழை உழைக்கும் மக்கள் மீது எல்லையற்ற அன்பு சுரக்கும். அல்லலுறும் உழைக்கும் மக்களது நல்லது கெட்டது அனைத்தும் அவரது மனதை எப்போதும் அலைக்கழிக்கும். இவற்றோடு கூடவே அறிவுத்தேடலும் தோழர் யாகூப் பைலானுடைய மனதை அலைக்கழித்தது. தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களுடைய வெற்றிகரமான உருவாக்கம்தான் தோழர் யாகூப் பைலான். வாழ்நாள் முழுவதும் புரட்சியாளராக தன்னை நிரூபித்தார். மறைந்த தோழர் யாகூப் பைலான் அவர்களுக்கு இரங்கலும் அஞ்சலியும் செலுத்துவதற்காக கடந்த ஜூன் 22ம் தேதியன்று மேற்கு வங்கம் தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தில் ஜாய்நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் நமது கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் இவ்வாறாகத்தான் புகழாரம் சூட்டி உரையாற்றினார்.

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரும் தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தின் செயலாளருமான தோழர் யாகூப் பைலான் நீண்டகாலம் நோயோடு போராடிய பின்பு கடந்த ஜூன் 14ம் தேதியன்று கல்கத்தா ஹார்ட் க்ளினிக்கில் உயிர்நீத்தார். அவருக்கு வயது 83. அவர் குத்தகை விவசாயிகள் ஏழை விவசாயிகள் உழைக்கும் மக்களுடைய போராட்டங்களின் பிரபலமான தலைவராக விளங்கியவராவார். வரலாற்றுச் சிறப்புமிக்க விளைச்சலை மூன்றாக பங்கிட்டுக் கொள்ளல் (தேபகா) இயக்கத்தின் தலைவராக அவ்வியக்கத்தின் பல உத்வேகமூட்டும் கதைகள் மூலம் அறியப்பட்டவர்.

தங்களது அன்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமான அத்தோழரின் மரணத்தை கேள்வியுற்றவுடனேயே அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு கட்சித் தோழர்கள் மருத்துவமனையை நோக்கி விரைந்தனர். அமைதியோடும் மரியாதையோடும் மருத்துவமனையில் கூடிய கூட்டத்தில் அவருக்கு புரட்சிகர மலரஞ்சலி செலுத்தப்பட்டது. கட்சி கூட்டம் ஒன்றிற்காக அப்போது ஒரிஸ்ஸா சென்றிருந்த கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் சார்பாகவும் அங்கிருந்த பொலிட்பீரோ உறுப்பினர்கள் மத்திய கமிட்டி உறுப்பினர்கள் மாநில கமிட்டி உறுப்பினர்கள் கட்சி ஊழியர்கள் மருத்துவமனை பணியாளர்கள் மருத்துவர்கள் ஆகியோரும் அவருக்கு புரட்சிகர மலரஞ்சலி செலுத்தினர். அங்கிருந்து அவரது உடல் பிணவறைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. ஜூன் 14,15,16 ஆகிய 3 நாட்களும் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுமென கட்சி அறிவித்தது. இந்நாட்களில் கட்சிக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. நாடெங்கிலும் தோழர்கள் கறுப்புப்பட்டை அணிந்தனர்.

ஜூன் 16ம் தேதியன்று காலை முதலாகவே கட்சியின் மத்திய அலுவலகமாகிய 48 லெனின் சாரணியில் கட்சித் தோழர்களின் கூட்டம் அலைமோதத்துவங்கிற்று. அன்றுதான் அவரது இறுதி ஊர்வலம். நண்பகல் வாக்கில் பிணவறையிலிருந்து தோழர் யாகூப் பைலான் அவர்களின் பூதவுடலை தாங்கிய சவப்பெட்டி கட்சி அலுவலகத்தை வந்தடைந்தது. செந்துணியால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அவரது உடல் வைக்கப்பட்டது. அரைக்கம்பத்தில் பறக்கும் கொடியுடன் கம்சோமால் தோழர்கள் காவல்காத்து நின்றனர். கட்சித் தலைவர்கள் அமைப்பாளர்கள் கட்சி ஊழியர்கள் ஒவ்வொருவராக ஒழுங்கோடும் கட்டுக்கோப்போடும் மறைந்த தோழருக்கு மலரஞ்சலி செலுத்தினர். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ், பொலிட்பீரோ உறுப்பினர்களான தோழர்கள் மணிக் முகர்ஜி, ரஞ்சித் தர், அசித் பட்டாச்சாரியா மத்திய கமிட்டி உறுப்பினர்களான தோழர்கள் தேவபிரசாத் சர்க்கார், கோபால் குன்டு, சௌமன் பாசு, சங்கர் சாஹா, சாயா முகர்ஜி ஆகியோரும் மேற்கு வங்க மாநிலக் கமிட்டி உறுப்பினர்களும் கட்சியின் வர்க்க வெகுஜன முன்னணியின் தலைவர்களும் கட்சியின் பல்வேறு கீழ்மட்ட கமிட்டி தலைவர்களும் புரட்சிகர அஞ்சலி செலுத்தினர். சிபிஐ(எம்) கட்சியின் மாநில செயலாளரான தோழர் பிமன் பாசு, அக்கட்சியின் மாநில தலைவர்களில் ஒருவரான தோழர் ரோஹின் தேவ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைவரான தோழர் மஞ்சு குமார் மஜூம்தார், புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் மாநில செயலாளரான தோழர் ஷிடி கோஸ்வாமி, ஃபார்வேட் ப்ளாக்கின் மாநில தலைவர் தோழர் தேவப்ரதா கோஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலை கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரான தோழர் கார்த்திக் பால் ஆகியோரும் மறைந்த தலைவருக்கு புரட்சிகர மலரஞ்சலி செலுத்தினர். மாலைகளிட்ட பின்னர் இறுதி ஊர்வலம் துவக்குவதற்கான நேரம் வந்தது. செங்கொடிகளாலும் பதாகைகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட சவப்பெட்டிக்கு தோழரது உடல் எடுத்துச்செல்லப்பட்டது.

அவரது புரட்சிகர வாழ்க்கையின் ஆண்டுகளை குறிக்கும் வகையில் அரைக்கம்பத்தில் பறக்கும் 83 கொடிகளுடன் இளங்கம்யூனிஸ்ட் தோழர்கள் முன்னால் அணிவகுத்துச்செல்ல லெனின் சாரணியிலிருந்து தோழரது இறுதி யாத்திரை துவங்கிற்று. அதைத் தொடர்ந்து பின்னால் மிகமிக நீண்ட ஊர்வலமாக தோழர்கள் அணி

தொடர்ச்சி 8ம் பக்கம்

## பெருங்குழப்பத்தில் சிபிஐ(எம்)

# உண்மை நிலையறிய சிபிஐ(எம்) ஊழியர்கள் தமது கட்சி வரலாற்றை ஆய்வு செய்ய வேண்டும்

கடந்த பாராளுமன்ற தேர்தலில் பெரும் தோல்வியை சந்தித்தபின் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) [சிபிஐ(எம்)] கட்சியின் தொண்டர்கள் மட்டுமல்லாது ஊடகங்களின் செய்திகளின்படி தலைவர்களும்கூட பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். தேர்தலில் கண்ட பெரும் தோல்விக்குப் பின் சிபிஐ(எம்)யின் தலைமையில் மாற்றம் தேவை என வலியுறுத்தி உரத்தகுரல் மட்டுமல்ல, முன்னெப்போதுமில்லாத வகையில் கல்கத்தாவில் அலிமூதீன் தெருவிலுள்ள சிபிஐ(எம்) மாநில தலைமையகத்தை முற்றுகையிட்டனர். சிபிஐ(எம்) வரலாற்றில் இது முதல் முறையாக கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சில தலைவர்கள் உட்பட கட்சியின் அதிருப்தியுற்ற தொண்டர்கள் கட்சியின் தலைமையகத்திற்கு பேரணியாக அணிதிரண்டு சென்றது தேசிய அரசியலிலிருந்து துடைத்தெறியப்பட்ட கட்சியை காக்கும் பொருட்டு தலைமையில் உடனடி மாற்றம் தேவை என அவ்வார்ப்பாட்டக்காரர்கள் கோரினர். தேர்தலில் துடைத்தெறியப்பட்டபின்பும் தலைவர்கள் பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பதை கேள்வியெழுப்பிய ஒரு முன்னணி செயல்வீரரும் கட்சியின் வெப்சைட்டை கவனித்துவருபவருமான ஒருவரை கட்சியிலிருந்து நீக்கினர். அரசியல் தந்திராபோயத் தவறுகள் மற்றும் ஆணவத்தின் காரணமாக தலைவர்கள் மக்கள் மத்தியில் அனைத்து நம்பகத்தன்மையையும் இழந்துவிட்டனர் என ஒத்த கருத்துடைய தன் தோழர்களுக்கு மெயில் அனுப்பினார். "இவ்வளவு பெரிய தோல்விக்குப்பிறகும் பொறுப்பேற்கத் தவறியதோடு மட்டுமின்றி அவர்கள் எந்தவித பதவியிலிருந்தும் விலக மறுக்கிறார்கள்" எனவும் அவர் மேலும் கூறினார். பொலிட்பீரோ உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற்ற சமீபத்திய மேற்குவங்க மாநில கமிட்டி கூட்டத்தில் ஒருவரை ஒருவர் கடுமையான சொற்களால் தாக்கிக் கொண்டனர். ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டனர். தலைவர்கள் குளுகுளு ஏர்கண்டிஷன் அறைகளையும் கார், பங்களாக்களையும் விட்டு விட்டு மக்களிடம் செல்லவேண்டும் என்ற கோரிக்கைகளடங்கிய போஸ்டர்கள் சில மாவட்டங்களில் தென்பட்டன. எனவே உட்கட்சி மோதல்களும் குறிப்பாக தலைமைப்பீடத்திலுள்ளவர்கள் மாநில அளவிலும் மத்திய அளவிலும் மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கைகளும் வெளிப்படையாக எழுகின்றன என்பது மிகத்தெளிவு.

ஆனால், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக சிபிஐ(எம்) பின்பற்றிவரும் அரசியலை வைத்துப் பார்க்கும்போது தலைமைப்பீடத்தில் சில தலைவர்களை அப்புறப்படுத்திவிடுவதால் எதுவும் சரியாகிவிடாது என்பது எங்களுடைய கருத்தாகும். பிரச்சினை மிக அடி ஆழத்தில் உள்ளது. சிபிஐ(எம்)யின் தொண்டர்கள் இடதுசாரித்தனத்தை உயர்த்திபிடிக்க வேண்டும், சமீபத்திய நிகழ்விகளிலிருந்து உரிய அரசியல் பாடங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என உண்மையிலேயே விரும்பினால் கீழே நாம் எழுப்புகின்ற சில அம்சங்கள் குறித்து ஆழ்ந்த பரிசீலனையையும் ஆய்வையும் செலுத்த வேண்டும்.

### பிளவுறாத இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒருபோதும் கம்யூனிஸ்ட் கட்சியாக உருவாகவில்லை

தேர்தல் தோல்விகளால் இவ்வாறு மிகுந்த ஏமாற்றத்திற்கு அவர்கள் உள்ளாகியிருப்பது இயற்கையானதே. ஆனால் இந்தநிலை அக்கட்சிக்கு ஏற்பட்டது எதனால்? சில தலைவர்கள் உரிய தலைமையை அளிக்க தவறியதாலா அல்லது இடதுசாரிப் பாதையைவிட்டு விலகியதாலா? இதுபோன்ற சிந்தனை மிகமிக எளிமையானதாகும். அவர்களுடைய கட்சி எப்போதாவது மார்க்சிய கோட்பாடுகளை பின்பற்றி இருக்கிறதா? என்ற அடிப்படை கேள்வியே தலைமையில் மாற்றம் கோருமளவிற்கு அத்தொண்டர்களை கொதிப்படையச் செய்திருக்க வேண்டும். வெறும் பெயர் ஒரு கட்சியை மார்க்சிஸ்ட் கட்சியாக்கிவிடாது. வாழ்வின் அனைத்து அம்சங்களையும் தழுவிய ஒரு வழிகாட்டு தத்துவமாக மார்க்சிசத்தின் சாராம்சத்தை உட்கிரகிக்கவும் அதற்கேற்ப நடந்துகொள்ளவும் வேண்டும். பிளவிற்று முன்பிருந்த ஒன்றுபட்ட சிபிஐயும் பின் அதிலிருந்து பிரிந்துவந்த சிபிஐ(எம்)மும் எப்போதாவது இப்பாதையில் அடிவைத்து வந்துள்ளதா? இக்கேள்விக்கு பதில் "இல்லை" என்பதாகும். உண்மை, நேர்மை, மிகப்பெரிய தியாகம், மார்க்சிசம்–லெனினிசத்தின் மீது உணர்வுபூர்வமான பற்றுதல் இவையெல்லாம் இருந்தபோதிலும் ஒன்றுபட்ட சிபிஐயின் தலைவர்களால் விஞ்ஞானத்திற்கெல்லாம் விஞ்ஞானமான மார்க்சிசத்தை புரிந்துகொள்ள முடியவில்லை. கட்சியை அமைக்கும் லெனினிச கோட்பாடுகளைப் பின்பற்றி கட்சியை கட்டமுடியவில்லை. அது கம்யூனிஸ்ட் கட்சி என்ற பதத்தை எடுத்துக்கொண்டது. சரி, ஆனால் அதனுடைய மையக்கரு கம்யூனிஸ்ட் அல்லாமலிருந்தது. அந்த ஒன்றுபட்ட சிபிஐ தலைமைக்கு கம்யூனிசம் என்பது வெறும் அரசியல் கோஷமாகவே இருந்தது. வாழ்க்கைத் தத்துவமாக ஒருபோதும் இருக்கவில்லை. மார்க்சிசம்–லெனினிசத்தை அணுகும் முறையியலைக் குறித்தும் பருண்மையாக பிரயோகப்படுத்துவது குறித்தும் ஒன்றுபட்ட சிபிஐயின் தலைவர்களால் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியவில்லை.

எனவே, அக்கட்சி பிறக்கும்போதே முடமானது. விடுதலைப் போராட்டத்தின்போது ஒன்றுக்குப்பின் ஒன்றாக அடிப்படையான தவறுகளை செய்தது. விடுதலைப் போராட்டத்தின் போது குட்டி பூர்ஷ்வா புரட்சியாளர்களுடன் கூட்டுசேர்ந்து காங்கிரஸின் பூர்ஷ்வா தலைமைக்கு மாற்றாக இடதுசாரி மாற்றை உருவாக்கும் வாய்ப்பை பிரகாசிக்கச்செய்யவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சமரசத்தின்மூலம் அதிகாரத்தை பறிக்கும் இந்திய தேசிய பூர்ஷ்வாக்களின் சதியை முறியடிக்கும் தேவையை – அதுதான் மாபெரும் ஸ்டாலின் அப்போது வழங்கிய வழிகாட்டுதலாகும் – பருண்மையான சூழ்நிலை கோரியபோதும் சிபிஐ தலைமை செய்யத் தவறியது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸை எதிர்த்தது மட்டுமல்ல, 'துரோகி' (Quisling) என முத்திரைகுத்தி அவரை களங்கப் படுத்தி, விடுதலைப் போராட்டத்தின் மீது காந்தியவாத சமரசவாத தலைமை தனது பிடியை இறுக்கிக் கொள்ள உதவி, சீனாவைப் போல ஒரு புதிய ஜனநாயக புரட்சியை வென்றெடுக்கும் வாய்ப்பை பாழாக்கிவிட்டனர். பாசிசத்திற்கெதிரான 'மக்கள் போராட்டம்' எனும் கோஷத்தை எழுப்பி பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு சிபிஐ தலைமை ஆதரவளித்தது. நாட்டை கூறுபோடுவதை ஆதரித்து, இந்திய தேசிய பூர்ஷ்வாக்களுக்கும் அதன் அரசியல் கட்சியான காங்கிரஸ் அதிகாரத்தில் நிலைபெறவும் முழுமையாக சிபிஐ தலைமை உதவியது. இது சாதாரணமான தவறல்ல, நாட்டுமக்கள் இன்றளவும் அதற்கான விலையை கொடுத்துக்கொண்டிருக்கின்ற ஒரு இமாலயத் தவறாகும். மிகமோசமான இத்தவறு ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக சிபிஐ உருவாகாததாலும் மார்க்சிய அணுகுமுறை மற்றும் முறையியலைப் பின்பற்றி தேசிய, சர்வதேசிய பிரச்சனைகளை அணுகாததாலும் ஏற்பட்டதாகும்.

### வர்க்க குணாம்சம், அணுகுமுறை, கண்ணோட்டத்தில் சிபிஐயிலிருந்து சிபிஐ(எம்) எவ்விதத்திலும் வேறுபட்டதல்ல

ஒன்றுபட்ட சிபிஐயிலிருந்து சிபிஐ(எம்) பிரிந்தபோது இந்தியப்புரட்சியின் கட்டம், சக்திகளின் அணிசேர்க்கை அல்லது புரட்சி திட்டம் போன்ற அடிப்படை அரசியல் கேள்விகள் எதுவும் எழவில்லை. தலைமைக்கான சண்டை, சோவியத்வழி, சீனவழி என்று சொல்லப்படுகின்ற பிரச்சனைதான் எழுந்தது. அதன் தலைவர்கள் கடந்தகால தவறுகளிலிருந்து விடுபட வலிமிகுந்த எவ்வித முயற்சியை எடுக்கவில்லை. மார்க்சியமல்லாத குட்டி பூர்ஷ்வா கண்ணோட்டத்தை நிறுத்திக்கொள்ளவுமில்லை. உரிய போராட்டத்தின் மூலம் உண்மையான கம்யூனிச குணாம்சத்தை பெறும் கடினமான முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை. மாறாக, ஒன்றுபட்ட சிபிஐக்குள் நிலவிவந்த சில குழுக்கள் சிபிஐ(எம்)ஐ உருவாக்க அக்கட்சியிலிருந்து வெளியேறியதை சிபிஐ(எம்) தலைவர்களே ஒத்துக் கொண்டனர். "சிபிஐ(எம்)ன் திட்டத்திற்கான குறிப்பு" என்ற வெளியீட்டினை சிபிஐ(எம்) தொண்டர்கள் பார்ப்பதின்மூலம் அதில் ஒன்றுபட்ட சிபிஐக்குள் கோஷ்டிகள் நிலவிவந்ததை மறைந்த திரு. நம்பூதிரி பாட் அவர்களே ஒத்துக்கொண்டுள்ளதைக் காணலாம். 1962ல் 'தேஷிதோஷி' என்ற சிபிஐ(எம்)யின் வங்கப்பத்திரிக்கையில் மறைந்த பிரமோத் தாஜ் குப்தா ஒன்றுபட்ட சிபிஐக்குள் எவ்வாறு பல்வேறு கோஷ்டிகள் நிலவின என்பதையும் ஒன்று ஜோதிபாசு தலைமையிலும் மற்றொன்று தனது தலைமையிலும் அக்குழுக்களெல்லாம் ஒன்றுசேர்ந்து சிபிஐ(எம்)ஐ உருவாக்கின என்பதையும் விளக்கியுள்ளார்.

எனவே, சிபிஐயில் பல கோஷ்டிகள் இருந்தன. அதன் அர்த்தம் இணையான தலைவர்கள், அதனர்த்தம் சிந்தனையில் பல்வேறு போக்குகள் இருந்தன என்பதாகும். இது எந்தவொரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியின் குணாம்சத்திற்கும் முழுவதும் விரோதமானதாகும். இணைத் தலைவர்கள் என்பது இணை சிந்தனைகள். ஒரு முக்கிய நிபந்தனையாக ஒருமித்த சிந்தனை நிலவக்கூடிய ஒரு ஓர் உடலமைப்பைக் கொண்ட ஒரு கம்யூனிஸ்ட் கட்சியில் எவ்வாறு இணையான சிந்தனைகள் இருக்கமுடியும்? எல்லாவற்றிற்கும் மேலாக வர்க்கபிளவுள்ள சமுதாயத்தில், ஒவ்வொரு சிந்தனையும் ஒரு வர்க்க சிந்தனையே என்பது மார்க்சிய போதனையின் அரிச்சுவடியாகும். இணை சிந்தனைகள் நிலவுதல் என்பது இணை வர்க்க சிந்தனைகள் நிலவுதல் என்பதாகும். வேறு வார்த்தைகளில், அவர்களே ஒத்துக்கொண்டது போல் ஒன்றுபட்ட சிபிஐயில் பல்வேறு வர்க்க சிந்தனைகள் நிலவின.

ஒரு கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு சிந்தனை மட்டுமே, பாட்டாளிவர்க்க சிந்தனை மட்டுமே நிலவ முடியும். இவ்வாறு இணையான தலைவர்கள் மற்றும் இணையான வர்க்க சிந்தனைகளுடன் பல்வேறு கோஷ்டிகளின் ஒரு திரட்சியே சிபிஐ என்பதை காணமுடியும். மேலும் இந்தத் தலைவர்கள் பல்வேறுபட்ட கண்ணோட்டம் மற்றும் மன அமைப்பு மற்றும் அதுபோன்றவைகளை கொண்டிருந்தனர். பின் எவ்வாறு அது ஒரு கம்யூனிஸ்ட் கட்சி என அழைக்கப்படமுடியும்? இந்த மரபு அப்படியே சிபிஐ(எம்)க்கு மாற்றப்பட்டது. பழைய முறையிலான அணுகுமுறை, மனஅமைப்பு, ஆய்வு செய்யும் செயல்முறை, கண்ணோட்டம், நடத்தைப் பாங்கு, மார்க்சியமல்லாத வாழ்க்கைமுறை மற்றும் அடிப்படை கருத்தியல் அமைப்பும்கூட பழையதை ஒத்தே இருந்தது. பெயரில் மட்டும் சிறிது மாற்றம். நிகழ்ச்சி நிரலில் சில வார்த்தைகளை மட்டும் நீக்கி, சேர்த்திருந்தார்கள். பழைய கட்சியுடனான மார்க்சியமல்லாத சிந்தனைப்போக்கு மற்றும் ஆய்விலிருந்து விடுபட சிரத்தைமிகுந்த வலிமிகுந்த போராட்டங்கள் எதையும் சிபிஐ(எம்) தலைவர்கள் நடத்தவில்லை. எனவே மார்க்சியமல்லாத குணம் சிபிஐ(எம்)மிலும் உட்பொதிந்திருந்தது. தங்களுடைய தலைவர்களுக்கு எதிராக தற்போது கணைமாரி பொழிகின்ற சிபிஐ(எம்) தலைவர்களும் அதிருப்தியாளர்களும் உண்மையையும் தங்கள் கட்சியில் நடந்த தவறு என்ன என்பதையும் அறிய உண்மையிலேயே விரும்பினால் மேற்சொன்ன இவ்விஷயங்களுக்குள் ஆழமாக செல்லவேண்டும்.

### சிபிஐ(எம்) கட்சியின் தவறான வரைவுத் திட்டங்கள்

சிபிஐ(எம்)ஆல் வடிவமைக்கப்பட்ட புரட்சியின் கட்டம் குறித்த சில வார்த்தைகளை சொல்வது இங்கு பொருத்தமாக இருக்கும். ஏனெனில் அது சிபிஐ(எம்) தலைவர்களின் முதலாளித்துவ ஆதரவு திட்டம் மற்றும் செயற்பாடுகளை புரிந்துகொள்ள உதவும். பழைய கட்சியை 'திருத்தல்வாதிகள்' என முத்திரை குத்துவது மற்றும் அனைத்து சொற்றாடல்கள் இருந்தபோதும் புரட்சி குறித்த திட்டத்தில் பழைய கட்சிக்கும் சிபிஐ (எம்)க்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவை குணாம்சப் படுத்தியதினடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மக்கள் ஜனநாயக புரட்சி எனும் அதே நிலைப்பாட்டிலேயே சிபிஐ(எம்) இருந்தது. ஒன்றுபட்ட சிபிஐயைப் போலவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சமரசப்பாதையின் மூலம் இந்திய தேசிய பூர்ஷ்வாக்களால் அரசியல் அதிகாரம் கைப்பற்றப்பட்டு ஒரு அரசியல் ரீதியான சுதந்திர தேசிய பூர்ஷ்வாக்களின் அரசாக இந்தியா உருவெடுத்ததை சிபிஐ(எம்) அங்கீகரிக்க மறுத்தது. அத்துடன் லெனினின் போதனைகளின்படி முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப்புரட்சி எனும் கட்டத்திற்குள் இந்தியா நுழைந்தது. இந்த புறவயப்பட்ட உண்மையை உணரத்தவறியதால்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# பிளவுறாத சிபிஐ மற்றும் சிபிஐ(எம்) தலைமையால் மார்க்சிசத்தையோ லெனினிச கட்சி கோட்பாடுகளையோ கிரகிக்க முடியவில்லை

*3ம் பக்கத் தொடர்ச்சி*

இந்திய புரட்சியைப் பற்றிய தங்களது தவறான கண்டுபிடிப்பை தொடர்ந்து அசைபோட்டு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்துவ எதிர்ப்பை உயர்த்திபிடித்தனர்.

சக்திகளின் அணிசேர்க்கையைப் பொறுத்தவரை தேசிய பூர்ஷ்வாக்களும் பணக்கார விவசாயிகளும் புரட்சியின் கூட்டாளிகள் என சிபிஐ(எம்) கருதுகிறது. அதாவது தேசிய பூர்ஷுவாக்களின் அங்கத்தினர்களான டாட்டாக்கள், பிர்லாக்கள், அம்பானி, மிட்டல், ஜிண்டால் ஆகியோர் சிபிஐ(எம்)யின் கூட்டாளிகள். அதைப்போலவே கிராமப்புற பணக்கார விவசாயிகளும் கூட சிபிஐ(எம்)யின் கூட்டாளிகள். இவ்வாறு, அரசு அதிகாரத்தில் இருப்பவர்கள் இந்திய தேசிய முதலாளிகள். இந்திய புரட்சியானது பாட்டாளிவர்க்கத்தின் தலைமையில் ஏழை விவசாயிகளை கூட்டுசேர்த்துக்கொண்டு முதலாளித்துவத்தை தூக்கியெறியவேண்டி முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப்புரட்சி என்பதை சிபிஐ(எம்) தலைவர்கள் நிராகரித்தனர்.

தவறான பாதையை பின்பற்றியதன் காரணமாக பழுதுபட்ட அக்கட்சி அமைப்பின் காரணமாக "முற்போக்கு தேசிய பூர்ஷ்வாக்களை"யும் அவர்களின் அரசியல் பிரதிநிதியையும் எப்போதும் தேடிக்கொண்டு அவர்களுடன் நட்பை ஏற்படுத்திகொள்கிறார்கள். அதிகாரத்திலுள்ள ஏகபோக மூலதனத்திற்கெதிராக அடிகொடுத்து அதிகாரத்திலிருந்து அவர்களை தூக்கியெறிவதே புரட்சியின் நோக்கமாக இருக்கையில் அவர்களுடைய விசித்திர திட்டமான மக்கள் ஜனநாயக புரட்சியின்படி தேசிய பூர்ஷ்வாக்களில் ஒரு பிரிவினரை முற்போக்காளர் என முத்திரை குத்துவதில் மும்முரமாக இருக்கிறார்கள். ஒன்றுபட்ட சிபிஐயின் தலைவர்கள் முற்போக்கு பூர்ஷ்வாக்களின் பிரதிநிதி எனக்கூறி நேருவின் பின்னால் அணிதிரண்டு, இந்திய ஏகபோகங்கள் தங்கள் நிலையை ஸ்திரப்படுத்திக்கொள்ள உதவினர். பின்னர், முற்போக்கு சக்திகளையும் இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸில் "ஜனநாயக அபிலாஷைகளை"யும் கண்டுபிடித்தனர். சிபிஐ(எம்)யின் மத்திய ஏடான பீப்பிள்ஸ் டெமாக்ரஸியில் "பெரிய நிலப்பிரபுக்கள், ஏகபோகங்களை வெறுக்கும் ஒரு ஆரோக்கியமான போக்கை இந்திரா காந்தி பிரிவு கொண்டிருக்கிறது...." அதே மூச்சில் "சுயநல சக்திகளை எதிர்த்து போராடும் ஆர்வம் கொண்ட இந்திரா காங்கிரஸின் ஒரு பிரிவை உள்ளடக்கிய ஜனநாயக சக்திகளின் ஒரு விரிவான முன்னணியை" உருவாக்குவது குறித்தும் அது பேசியது. சிபிஐ(எம்)யின் நற்சான்றிதழை பெற்ற ஐந்தே ஆண்டுகளுக்குள் அதே இந்திரா காங்கிரஸ் நாட்டின் மீது நெருக்கடி நிலையை பிரயோகித்து தனது பாசிஸ குணாம்சத்தை காட்டியது. உண்மையில் மக்கள் ஜனநாயக புரட்சி எனும் ஆய்வும் தேசிய பூர்ஷ்வாக்களில் முற்போக்கு பிரிவினரை கண்டுபிடிப்பதின் நோக்கமும் ஏகபோக முதலாளிகள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளான அரசியல் கட்சிகளுடன் சிபிஐ(எம்) தலைமை கூடிக்குலாவுவதற்கு சாதகமாக இருந்தது. எனவே, இந்திராகாந்தி அல்லது மன்மோகன்சிங்கிற்கு ஆதரவளிப்பதற்கோ டாட்டாவின் நலனுக்காக சிங்கூர் விவசாயிகள் மீது கொலைதாக்குதல் தொடுப்பதற்கோ சிபிஐ(எம்)யின் தலைமைக்கு எவ்வித தயக்கமுமில்லை. எனவே, சிபிஐ(எம்) தலைமையின் தவறுகளும் பாதை மாறுதல்களும் மார்க்சியத்திற்கு விரோதமான கொள்கை மற்றும் கண்ணோட்டத்திலிருந்தே தோன்றுகிறது என்பது தெள்ளத்தெளிவாகிறது. அதேபோல், அக்கட்சி ஒட்டுமொத்தமாக முதலாளித்துவ வாக்கு அரசியல் பக்கம் சாய்ந்ததும் ஆளும் முதலாளிகளுக்கு சாதகமாக செயல்பட்டு எப்படியேனும் பதவியையும் அதிகாரத்தையும் தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்ற பேராசைக்கு பலியானதும் தேசிய முதலாளிகளோடு நேச உறவு கொள்வது என்ற தவறான கருத்தியல் திட்டத்தின் தவிர்க்க இயலாத பின்விளைவேயாகும். இப்பிரிவு எழுப்பிய சில கோஷங்களும் சில நடவடிக்கைகளும் மக்களின் ஏகபோக எதிர்ப்பு ஜனநாயக உணர்வுகளுக்கு ஏற்றவாறு உள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தேர்தல் ஆதாயத்திற்காக வேனும் 1950 மற்றும் 60களில் தங்களுடைய 'இடதுசாரி' தோற்றத்தை காப்பதற்காக அவர்கள் கடைபிடித்த கொஞ்சநஞ்ச இடதுசாரிதனத்திலிருந்தும் வெகுதூரம் சென்றுவிட்டனர். மிகக்குறிப்பாக 1977ல் மேற்குவங்கத்தில் பதவியில் அமர்ந்தபின்பு இது முழுக்கமுழுக்க உண்மையாகியது. அப்போதிருந்து எப்படியேனும் பதவியை தக்கவைத்துக் கொள்ளவும் பிற பூர்ஷ்வா, குட்டிபூர்ஷ்வா கட்சிகளிடம் உள்ளதைப்போல் பதவியிலமர்ந்து அனைத்து சலுகைகள் ஆதாயங்களையும் அனுபவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் குட்டிபூர்ஷ்வா வர்க்க அரசியலுக்குள் அக்கட்சியை மூழ்கடிக்கும் பொருட்டு முன்பிருந்த கொஞ்சநஞ்ச இடதுசாரிதனத்தையும் சிபிஐ(எம்) தலைமை துடைத்தெறிந்துவிட்டது. எனவே, போராட்டப்பாதையை கைகழுவிவிட்டதோடு, அவர்களே பதவியில் இருப்பதால் தொழிலாளர்களும் விவசாயிகளும் இனிமேலும் போராட்டங்கள் நடத்தத்தேவையில்லை எனவும் வாதிட்டனர். பதவியில் அமர்ந்துகொண்டு அனைத்தையும் நாங்களே கொடுத்துவிடுவோம் என்றனர்.

பாராளுமன்ற மாயையிலிருநது உழைக்கும் மக்களை விடுவிப்பதும் புரட்சியின் தேவையை மக்கள் உட்கிரகிக்கச் செய்வதும் ஒரு உண்மையான புரட்சிகரக்கட்சியின் கடமையாக இருக்கையில் "மார்க்சிஸ்ட்" எனும் முகமூடி அணிந்து பாராளுமன்ற வாதத்தை மக்களிடம் விதைத்து, வாக்குகளை தக்கவைப்பதும் அரசாங்கத்தில் அமர்வதும் தவிர அரசியலில் வேறொன்றுமில்லை எனும் கருத்தையும் மக்களிடம் திணித்தார்கள். இடதுசாரி–ஜனநாயக இயக்கத்தின் கோட்டை என்ற பெருமை பெற்றிருந்த மேற்கு வங்க மாநிலத்து உழைக்கும் மக்களை மிக சூழ்ச்சிகரமான முறையில் சிபிஐ(எம்) வீரியமிழக்கச் செய்தது. போராடும் குணத்தை அப்புறப்படுத்தி, அழியும் முதலாளித்துவத்தின் அனைத்து கேடுகளும் நிகழக்கூடிய இடமாக, அனைத்து தவறுகள், அநீதிகளுக்கும் எதிராக போராடும் உத்வேகங்கொண்ட அம்மாநிலத்தை மிக விரைவில் மாற்றிவிட்டனர். புரட்சியைப் பற்றிய கனவை இன்னமும் சுமந்து கொண்டிருக்கிற சிபிஐ(எம்)யின் நேர்மையான தொண்டர்கள் உட்பட, இடதுசாரி எண்ணங்கொண்டவர்களின் மீதான கிரிமினல் தாக்குதலாகும் இது.

### இடதுசாரிவாதத்திற்கு சவக்குழி

காங்கிரஸை முறியடித்து 1967ல் முதல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைத்தது முதற்கொண்டு வன்முறை அரசியலைக் கையாண்டு, எதிர்ப்பை நசுக்கி, ஆதரவைப்பெறத் துவங்கியது. பதவியில் அமர்ந்தவுடன் உள்துறையை தனதுவசம் வைத்துக் கொண்டு சிபிஐ(எம்) தலைவர்கள் மிகவும் மமதையோடு எவரையும் துச்சமாக மதித்து ஏளனம் செய்தனர். ஐக்கிய முன்னணியின் கூட்டாளிகளின் அமைப்புக்களை பலாத்காரமாக ஒடுக்க அது காவல் துறையை பயன்படுத்தி, தனது ஸ்தாபன பலத்தை அதன்மூலம் விரிவாக்கிக்கொண்டது. சிபிஐ(எம்) தலைவர்களின் கரங்களுக்குள் அதிகாரம் சென்று, மற்றவர்களை அப்புறப்படுத்தி தான் மட்டும் அதிகாரத்தில் தொடர காரியங்களை அக்கட்சி ஏற்கெனவே எடுத்திருந்தது மிகத்தெளிவாக தெரிந்தது. அதிகாரவெறி தலைக்கேறிய சிபிஐ(எம்) தலைவர்கள் மற்ற எல்லா கட்சியினரையும் துடைத்தெறிந்துவிட்டு தன்னந்தனியாக அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான வழி தேடினர். ஆனால் சிபிஐ(எம்) தலைவர்களின் ஜம்பமும் வீராப்பும் காவல்துறை தங்கள் வசமிருந்த வரையில்தான். ஐக்கிய முன்னணி அரசாங்கம் கவிழ்ந்ததும் அவர்களுடைய பகட்டும் அதிகார தோரணையும் காணாமற்போய் கூட்டுக்குள் முடங்கினர். 1972ல் மேற்குவங்க மாநில காங்கிரஸ் அரசாங்கத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கரவாதத்திற்கெதிரான ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கத்தை கட்ட எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) விடுத்த அழைப்பை போலீஸ் அராஜகத்தை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும் என்ற சாக்கைக்கூறி நிராகரித்தனர். மேற்கு வங்க மண்ணின் போராட்ட உத்வேகத்தை கிழித்தெறியும் சிபிஐ(எம்)யின் வர்க்க உள்ளுணர்வை ஆளும்வர்க்கம் கண்டுகொண்டது. அதே நேரத்தில், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை ஒதுக்கி வைத்து முடக்குவதற்கும் ஆளும் வர்க்கம் விரும்பியது. இதன் மூலம் அரசியலில் முரணிசைவு (antithesisis) தலைதூக்காமல் செய்து தனது வஞ்சகமான வர்க்கச்சுரண்டலை தங்குதடையின்றி நடத்திக்கொள்ளலாம் என்றும் திட்டமிட்டது. ஆளும் வர்க்கத்தின் இந்த நயவஞ்சக திட்டத்திற்கு சிபிஐ(எம்) துணைபோனதையும், ஐக்கிய முன்னணியிலிருந்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வெளியேறுவதற்கான திரைமறைவு வேலைகளில் ஈடுபட்டதையும் அதன்மூலம் ஐக்கிய முன்னணியில் உண்மையான இடதுசாரி அரசியல் இல்லாமற்போகச் செய்ததையும் மேற்குவங்க மக்கள் கண்டனர்.

தற்போது தாங்கள் உருவாக்கியுள்ள முன்னணியில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இல்லாததால் அமைதியற்ற அல்லது அராஜக நிலைமை இனியும் இருக்காது என 1977 சட்டசபை தேர்தல் நடைபெறுவதற்கு சற்று முன்பு ஜோதிபாசு ரேடியோவில் பேசியதன்மூலம் மேற்சொல்லப்பட்ட கருத்து உறுதிபடுத்தப்பட்டது.

சிபிஐ(எம்) போர்குணமிக்க எவ்வித போராட்டத்திலும் இனி ஈடுபடாது என மேலும் அவர் உறுதியளித்தார். அதனைத்தொடர்ந்து சிபிஐ(எம்) மேற்கு வங்க மாநிலத்தில் ஆட்சியைப் பிடித்தது. அக்கட்சியினுடைய முதலமைச்சராக ஆகக் கூடியவரான ஜோதிபாசு கூறிய வார்த்தைகளின் அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியாத அக்கட்சியின் தொண்டர்கள் பரவசமடைந்தனர். ஜோதிபாசுவின் அவ்வார்த்தைகளில் துளியேனும் ஏதாவது இடதுசாரித்தனம் இருந்ததா? யாருக்காக அவ்வார்த்தைகளை அவர் சொன்னார்? யாருக்காக அவ்வுறுதிமொழிகளை அளித்தார்? நிச்சயமாக, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யை கழற்றிவிடவேண்டும் என்றும், போர்குணமிக்க போராட்டத்தை கைவிடவேண்டும் என்றும் மக்களுக்கு அவர் சொல்லவில்லை. எனவே, அப்படிப்பட்ட உறுதிமொழியை ஆளும் முதலாளி வர்க்கத்திற்குத்தான் அவர் அளித்தார். ஏனெனில், 1967 மற்றும் 1969 ஆகிய இரண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலும் அங்கம் வகித்து, போலீஸ் தலையீட்டை தடுத்துநிறுத்தி, ஜனநாயக வெகுஜன போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) குறித்து ஆளும் முதலாளிவர்க்கம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்ததுதான் அதற்கு காரணமாகும். எனவே, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இல்லாததால் சிபிஐ(எம்) கூட்டணியைக் கண்டு அச்சப்பட ஒன்றுமில்லை என்கிற உத்தரவாதத்தை ஆளும் வர்க்கத்திற்கு அளிக்கவேண்டிய தேவை சிபிஐ(எம்) தலைமைக்கு இருந்தது.

சிவப்புக்கொடி என்பது ஓட்டுக்களைப் பெறுவதற்கான ஒரு அடையாள அட்டை மட்டுமேயாகும். எனவே, வெறும் ஒரு கயிறைப்பார்த்து பாம்பு என எண்ணி ஆளும்வர்க்கம் பயப்படக்கூடாது. ஆளும் வர்க்கத்துடன் கூடிக்குலாவி, தாஜா செய்யும் இத்தகைய அணுகுமுறை அதிகாரத்தில் அமர்ந்து சவாரி செய்ய சிபிஐ(எம்)க்கு உதவியபோது, இடதுசாரிதனத்திற்கு மிகப்பெரிய கெடுதலை இதுதான் ஏற்படுத்தியது. அதற்கான விலையைத்தான் தற்போது மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீழ்ச்சி அக்கட்சியின் நேர்மையான தொண்டர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

### சிபிஐ(எம்)யின் 34 ஆண்டுகால மேற்கு வங்க மாநில ஆட்சி வரலாறு

மீண்டும், மேற்குவங்கத்தில் சிபிஐ(எம்)ன் தொடர்ச்சியான 34 ஆண்டுகால ஆட்சியில் மக்கள் கண்ட அனுபவம் என்ன? அரசாங்கத்தை நடத்துவதில் எம்மாதிரியான கொள்கைகளும் கண்ணோட்டமும் சிபிஐ(எம்) கொண்டிருந்தது? அதன் கொள்கைகள் மற்றும் நடத்தையில் ஏதாவது இடதுசாரித்தனத்தின் சாயலாவது இருந்ததா? மக்களைச் சார்ந்திருப்பதற்குப் பதில் சிபிஐ(எம்) தலைவர்கள் முழுக்க முழுக்க போலீஸ் மற்றும் அதிகாரவர்க்கத்தையே சார்ந்திருந்தார்கள். ஒப்பீட்டளவிலான நிர்வாக நடுநிலைமையானது முழுக்க அழிக்கப்பட்டது. ஆளும்கட்சியின் ஒரு அங்கமாகவே போலீஸ் மற்றும் நிர்வாகம் மாற்றப்பட்டது. சிபிஐ(எம்)யின் கீழ்மட்ட தலைவர்கள்கூட உள்ளூர் காவல் நிலையங்களுக்கு கட்டளைகளை இட்டுக்கொண்டிருந்தனர். ஒரு இணை நிர்வாகத்தையே நடத்திக்கொண்டிருந்தனர். போலீஸ் மட்டுமல்ல கிரிமினல்கள் மற்றும் ஆயுதமேந்திய குண்டர்களை ஏவி மக்கள் போராட்டங்கள் எதையும் எவ்விதத் தயக்கமுமின்றி கொடூரமாக ஒடுக்கினார்கள். கல்கத்தா நகரத்திலும் புறநகர் பகுதிகளிலும் கிராமங்களிலும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) போராட்டக்காரர்களின் ரத்தம் எத்தனையோமுறை வடிந்திருக்கும்!

எந்தவொரு இயக்கமும் நியாயமானதா இல்லையா என்பதல்ல கேள்வி. எந்த கேள்வியும் கேட்காமல் சிபிஐ(எம்)க்கு அடங்கியிருக்கிறார்களா இல்லையா என்பது மட்டும்தான் கணக்கிற் கொள்ளப்படும். குடும்ப விவகாரங்களில்கூட அப்பட்டமாக தலையிட்டு உத்தரவுகள் பிரபித்தனர். வேண்டியவர்களுக்கு சலுகை, சுய–சேவை, ஊழல், பொதுப்பணத்தை தவறாக கையாளுதல், அச்சுறுத்துதல், மிரட்டுதல், பயங்கரம் அனைத்தும்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# இந்தியப் புரட்சி குறித்த சிபிஐ(எம்)யின் தவறான புரிதல் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்துடன் உறவாட உதவியது

4ம் பக்கத் தொடர்ச்சி

சிபிஐ(எம்) கட்சி மற்றும் அதன் அரசாங்கத்தால் மிக வெளிப்படையாக அரங்கேறின.

கிராம பஞ்சாயத்துக்கள் ஊழலின் கொத்தளமாகவும் சிபிஐ(எம்)யின் தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்வதற்கான தளமாகவும் மாறின. சாதாரண பஞ்சாயத்து உறுப்பினர் முதல் மேல்மட்டம்வரை செல்வங்கொழித்தனர், முந்தையநாள் குடிசையில் வாழ்ந்தவர் இன்று பெரும் பணக்காரர், பல்லடக்கு கட்டிடங்களுக்கு சொந்தக்காரர், விலை உயர்ந்த கார், பெரும் வர்த்தகம் என தொலைதூர கிராமத்தில் கூட செல்வத்தைப் குவித்தனர். தலைவர்கள், தொண்டர்களின் வாழ்க்கை முறையானது ஒரேயடியாக மாறியது. இவையெல்லாம் நன்கு வடிவமைக்கப்பட்ட கட்சி அமைப்பைப் பயன்படுத்தி நன்கு திட்டமிடப்பட்ட வகையில் நடைபெற்றன. மறுபுறம், நேர்மையற்ற வணிகர்கள், ஒப்பந்ததாரர்கள், ரியல் எஸ்டேட்காரர்கள், இடைத்தரகர்கள், நில மாஃபியாக்கள், சூதாட்டக்காரர்கள், பதுக்கல்காரர்கள் மற்றும் கருப்புச்சந்தைக்காரர்கள் ஆகிய அனைவரும் சிபிஐ(எம்) தலைவர்களின் அருளாசியுடன் கொடி கட்டிப் பறந்தனர். கிரிமினல்கள், சமூக விரோத சக்திகள் அனைவரும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மக்கள் எதிர்ப்பை சமாளிக்கவும் அனைத்து வித கேடுகெட்ட காரியங்களில் ஈடுபடவும் வாக்குச் சாவடிகளை கைப்பற்றுதல், கள்ளஓட்டு, வாக்காளர்களை பயமுறுத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டு தேர்தலில் மோசடிகள் செய்வதற்காக இக்கிரிமினல்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறுதான் அவர்களின் இடதுசாரித்தனம் நடைமுறைப் படுத்தப்பட்டது!

இடதுசாரி மார்க்சிஸ்ட் முகமூடி அணிந்து கொண்டு மேற்குவங்க மாநிலத்தின் எதிர்த்துப் போராடும் மனநிலையை குலைக்கக்கூடியவர்களாக எதிர்பார்த்தபடி சிபிஐ(எம்) தலைவர்கள் இருப்பதைக்கண்டு ஆளும் வர்க்கம் மிகுந்த மகிழ்ச்சியுற்றது. அனைத்துவகையான சந்தர்ப்பவாதம், ஆதாயம் தேடும் மனநிலை, சுயநலம், ஏமாற்று, கொடூர குற்றங்கள், திருட்டு, வழிப்பறி, கொள்ளை ஆகியவை ஒன்றுசேர்வதைக்கண்டு ஆளும்வர்க்கம் மிகுந்த மகிழ்ச்சியுற்றது. இதோடுகூடவே ஆபாச இலக்கியங்கள், ஆபாச திரைப்படம், ஆபாச போஸ்டர்கள், வெள்ளமென ஓடும் சாராயம், ஆன்லைன் லாட்டரி போன்ற பரந்துபட்ட சூதாட்டம் ஆகிய வடிவங்களிலான சாகும் முதலாளித்துவ வக்கிர கலாச்சாரத்தைப் பரப்புதல் போன்றவை அதிகரித்தன. ஈவிரக்கமற்ற முதலாளித்துவ ஒடுக்குமுறை மற்றும் அடக்குமுறைக்கெதிராக போராடும் திறனை இழப்பதற்காக மக்களின் தார்மீக முதுகெலும்பை ஒடிக்க எப்போதும் விரும்புகிற ஆளும் வர்க்கம் சிபிஐ(எம்) ஆட்சியில் சமுதாயம் சீரழிவுப் பாதையின் முழுவீச்சில் சென்று கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தினர்.

எனவே தொழில் குழுமங்களின், உயர்மட்ட ஏகபோகங்களின் பாராட்டுதலை பெற்று, "அதிகார பூர்வ இடதுசாரிகள்" என்ற பட்டம் பெற்று, தொடர்ந்து ஆட்சியில் நீடித்திருக்கும் வகையில் ஊடகங்களின் மிகஅதிகபட்ச ஆதரவை சிபிஐ(எம்) கட்சி பெற்றது. மக்கள் போராட்ட நிர்பந்தத்தின் காரணமாக சிங்கூரில் தனது நேனோ கார் தொழிற்சாலையை டாட்டா கைவிடும்போது மக்கள் சிபிஐ(எம்)ஐ ஆதரிக்கவேண்டும் என்ற ஒரு அரை பக்க விளம்பரம் முன்னணி செய்தித்தாள்களில் வெளிவந்ததை இங்கு நினைவுகூற வேண்டும். இவையெல்லாம் நடந்துகொண்டிருந்தபோது சிபிஐ(எம்) தலைவர்கள், தொண்டர்களில் ஒரு பிரிவினர் அதிகார போதை தலைக்கேறிப்போய் பணம் சேர்ப்பதிலும் சொத்து குவிப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அதே சமயம், இடதுசாரி அரசியலின்பால் உண்மையான பற்று கொண்ட பிறர் தங்களது கட்சி இந்த அளவிற்கு சீரழிந்து போகுமா என்று நம்பமுடியாமல் திகைப்புற்று நின்றனர்.

அக்கட்சியின் இம்முழு சீரழிவானது ஏதோ சில தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களால் வந்தது அல்ல, அவர்களில் சிலரை வெளியேற்றிவிட்டால் கட்சி சுத்தமாகிவிடாது என்பதை தலைமையில் மாற்றம் வேண்டும் என தற்போது கோருபவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். கட்சி என்ற முறையிலும் ஒட்டுமொத்த அளவிலும் கட்சி ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை சிபிஐ(எம்) கடைப்பிடித்து வந்த முதலாளித்துவ ஆதரவு மற்றும் இடதுசாரி விரோத அரசியலே அக்கட்சி சீரழிந்ததற்கு காரணமாகும்.

### சிங்கூர்–நந்திகிராமில் நடந்த காட்டுமிராண்டித் தாக்குதல்

ஆளும் ஏகபோகங்களுடன் சிபிஐ(எம்)யின் உயர்மட்ட தலைமை கொண்டிருந்த நெருக்கமான இணைப்பைப்பற்றி இப்பொழுது பார்ப்போம். சிங்கூரில் வளமான நிலங்களை விவசாயிகளிடமிருந்து பறித்து டாட்டாவிற்க்கு கொடுப்பதற்காக சிபிஐ(எம்) அரசாங்கம் பயங்கரவாதத்தை விவசாயிகள்மீது கட்டவிழ்த்துவிட்டது. விவசாயிகள் மீது காட்டுமிராண்டித்தனம் ஏவப்பட்டதை தொலைக்காட்சிகளும் ஒலிபரப்பின. சிங்கூர் நிலபறிப்பு எதிர்ப்புக்கமிட்டியின் தன்னார்வ தொண்டரான ராஜ்குமார் பூல் அடித்துக்கொல்லப்பட்டார். மற்றொரு தன்னார்வ தொண்டரான தபாசிமாலிக் என்ற வளர்இளம்பெண் கற்பழிக்கப்பட்டு உயிரோடு எரித்துக்கொல்லப்பட்டார். வருத்தம் தெரிவிப்பதற்கு பதிலாக கொலைசெய்யப்பட்ட அப்பெண்ணை சிபிஐ(எம்) தலைவர்கள் கேவலமாக சித்தரித்தனர். ஒரு உண்மையான இடதுசாரி கட்சியிடமிருந்து இதுபோன்ற விஷயங்கள் எதிர்பார்க்க முடியுமா? மாறாக, சிபிஐ(எம்)ன் அப்போதைய முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா "டாட்டாவின் முடியைக் கூட யாரும் தொட" அனுமதிக்கமாட்டேன் என ஆணவத்துடன் எச்சரித்தார். யாருடைய நலனுக்காக சிபிஐ(எம்) இருக்கிறது? ஏழை விவசாயிகளுக்காகவா? அல்லது நிதிமூலதனக்காரரான டாட்டாவுக்காகவா? சிவப்புக்கொடியை கையில் பிடித்துக் கொண்டு டாட்டாவின் கையாளாக நடந்துகொள்வது இடதுசாரித்தனத்திற்கு செய்யும் துரோகம் அன்றி வேறென்ன? இடதுசாரி அரசியலின் மரபுகளை தூக்கியெறியும் புத்ததேவ் பட்டாச்சார்யாவின் இடதுசாரித்தனத்தைக் கண்டு ஆளும் வர்க்கமும் ஏகபோகங்கள் கட்டுப்படுத்தும் மீடியாக்களும் களிப்புற்றதில் வியப்பில்லை. புத்ததேவ் முத்திரைக் கொண்ட இடதுசாரி அரசியல் என்று இதற்கு பெயர் கூட வைத்தனர். இதுபோன்ற கண்ணோட்டமும் அணுகுமுறையும் வெறுமனே ஒரு புத்ததேவ் பட்டாச்சார்யாவினுடையதா அல்லது முழு கட்சியினுடையதா? சிபிஐ(எம்)யின் நேர்மையான தொண்டர்கள் இதை ஆழமாக சிந்தித்து பார்க்கவேண்டும்.

அதேபோல் ரசாயன தொழிற்சாலை ஒன்றிற்காக (chemical hub) மிகமோசமான இந்தோனேஷியாவின் ஏகபோக குழுமமான சலீம் குழுமத்திற்காக நந்திகிராமில் சிறப்புப்பொருளாதார மண்டலம் (SEZ) அமைப்பதற்காக வலுக்கட்டாயமாக நிலங்கள் பறிக்கப்படுவதை எதிர்த்த விவசாயிகள் மீது சிபிஐ(எம்)ஆல் காட்டுமிராண்டித்தனமான பாசிச தாக்குதல் தொடுக்கப்பட்டது அனைவராலும் கண்டிக்கப்பட்டது. 2007ம் ஆண்டு மார்ச் 14 பாட்டாளி வர்க்கத்தின் பேராசான் கார்ல் மார்க்ஸ் நினைவு தினம் அன்று காலைப்பொழுது சில ஆயிரக்கணக்கான ஆயுதந்தாங்கிய போலீஸ் மற்றும் துணை ராணுவப்படையினரை கவசமாகக்கொண்டு போலீஸ் சீருடையணிந்து ஆனால் கால்களில் செருப்பை அணிந்திருந்த கூலிப்படையினர் நடத்திய படுகொலையானது வரலாற்றில் இதற்குமுன் எவரும் கண்டிராததாகும். பலர் கொல்லப்பட்டனர், பல நூறுபேர் படுகாயமுற்றனர், சிறு குழந்தைகள்கூட கொல்லப்பட்டனர், அவர்களுடைய தாயார் கண்முன்னரே மிருக இச்சைக்குள்ளாக்கப்பட்டு கிழித்தெறியப்பட்டனர். எண்ணற்ற பெண்கள் பலாத்காரஞ்செய்யப்பட்டனர். கூலிப்படையினரை அமர்த்தி போராடும் மக்களின் மனோபலத்தை முறியடிக்கும் நோக்கத்துடன் பெண்களின் மீது வன்முறையை ஏவுவதென்பது எங்கும் காணமுடியாத தன்மை வாய்ந்ததாகும். மதக்கலவரத்தின்போது பெண்களை பாலியல் ரீதியாக குறிவைப்பது சாதாரணமாக நிகழக்கூடியதாகும். ஜனநாயக இயக்கத்தில் போராடும் வெகுஜனங்களின் மீது இப்படிப்பட்டதொரு தாக்குதல்புரிய இந்திய வரலாற்றில் எந்தவொரு கொடூர அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கும் துணிவுவந்ததில்லை. இப்படிப்பட்ட படுபயங்கரத்தால் பாதிக்கப்பட்டவர்கள், கண்ணால் பார்த்தவர்கள், கொலைசெய்யப்பட்ட அல்லது சித்திரவதைக்குள்ளானவர்களின் முகங்களில் இப்படுபயங்கரத்தின் பயப்பீதி இன்னும் மறையவில்லை. "நந்திகிராம் மக்களுக்கு நரகத்தை அளிக்க இருக்கிறோம்" என மிகவெளிப்படையாகவே ஒரு மூத்த சிபிஐ (எம்) தலைவர் அப்போது கூறினார். பல சிபிஐ(எம்) தலைவர்கள் படுமோசமான கெட்டவார்த்தைகளால் போராடும் விவசாய பெண்களை திட்டினர். 2007 நவம்பர் 11 அன்று நிராயுதபாணி விவசாயிகள் மீது மீண்டுமொரு கொலைவெறித் தாக்குதல் தொடுக்கப்பட்டு "நந்திகிராமில் ஒரு புதிய சூர்யோதயம் எழுந்துள்ளது" என அது வர்ணிக்கப்பட்டது.

### ஓட்டு, அதிகாரம், முறைகேடாக சொத்து சேர்க்கும் அரசியலே சிபிஐ(எம்)யின் அரசியலாகும்

அவர்கள் கட்சியினுடைய அரசியலில் மார்க்சிசத்தை விடுங்கள், இடதுசாரி கொள்கைகளை ஒரு சிறிதளவேனும்கூட பின்பற்றி வரவில்லை என்பதை பதவியிலிருந்து அக்கட்சியின் தலைவர்கள் விலக வேண்டும் என தற்போது கோரும் அக்கட்சி தொண்டர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். விருப்புவெறுப்பின்றி. முன்னபிப்பிராயம் ஏதுமின்றி உண்மையிலேயே ஆய்வுசெய்துபார்ப்பார்களேயானால் சிபிஐ(எம்) தலைமையிலான தொடர்ந்த 34 ஆண்டு கால ஆட்சியில் மட்டுமல்ல அதற்குமுன்பே அரசியல் எதிரிகளுக்கெதிராக ஆதிக்கமனப்பான்மை, சதித்திட்டம் தீட்டுதல், பலப்பிரயோகம், ஆபாசமாக திட்டுதல், வக்கிர மொழியை பயன்படுத்துதல் ஆகியவையே சிபிஐ(எம்) கட்சியின் வாழும்முறையாக இருந்ததை கண்டிப்பாக அவர்கள் பார்க்கமுடியும்.

சிபிஐ(எம்) பெரியகட்சி. எனவே அவர்கள் எதை சொன்னாலும் வேதவாக்காக மற்றவர் அதை அப்படியே எடுத்துக்கொள்ளவேண்டும் – இதுதான் 1960 மற்றும் 1970களிலேயே அக்கட்சியின் மனோபாவமாக இருந்தது. இதுதான் இடதுசாரித்தனமா? குருட்டுத்தனம், வெறித்தனம், பிரச்சினைகள் ஏற்படுத்துதல் அரசியல் எதிரிகளின் மீது வெறுப்புணர்வை தூண்டுதல், விவாதத்தின்போது ஒருவருடைய தர்க்க ரீதியிலான திறனை அடக்குதல், பொறுமையின்மை, தத்துவார்த்த சகிப்புத்தன்மையின்மை, கேள்விக்கு பதிலளிப்பதற்கு மாறாக திட்டுதல் இவையெல்லாம் அப்பட்டமான ஒரு பிற்போக்கு சக்தியின் குணாம்சமாகும். தத்துவார்த்த ரீதியாக பலகீனமாக இருப்பவர்கள்தான் சித்தாந்த ரீதியிலான கேள்விகளை வெற்றுகோஷத்துடனும் ஆணவத்துடனும் சரி கட்டப்பார்ப்பார்கள். சிபிஐ(எம்) கட்சிக்குள் இருக்கின்ற மனசாட்சியை இன்னும் தொலைக்காதிருக்கின்ற இடதுசாரி மனஇயல்பை கொண்டுள்ள, தலைமையில் மாற்றம் வேண்டும் எனக்கோருகிறவர்கள் மேற்சொல்லப்பட்ட உண்மைகளை தற்போதேனும் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும் என வேண்டுகிறோம். மேற்சொல்லப்பட்ட அனைத்து நடத்தைகளும், தன்னகந்தையும் சிபிஐ(எம்)க்குள் உட்பொதிந்திருக்கிறது.

சிபிஐ(எம்)யின் பெரும்பாலான தலைவர்கள் இடதுசாரி கொள்கைகளைப் பற்றி நன்கு பேசுவார்கள். ஆனால் அதற்கு நேரெதிரான வாழ்க்கையை நடத்துவார்கள், மதத்தையும் மூடப்பழக்க வழக்கங்களையும் நம்புவார்கள், தங்கள் சொத்துக்களை பன்மடங்காக்கியிருக்கிறார்கள் எல்லாவற்றிற்கும் மேலாக, அரசியல் வாழ்விலிருந்து தங்கள் தனிப்பட்ட வாழ்வை மிகச்சரியாக பிரித்து வைத்திருக்கிறார்கள். ஆனால், அக்கட்சியின் தொண்டர்கள் இவற்றையெல்லாம் ஒருபோதும் கேள்வி எழுப்பியதில்லை. அதிகாரத்தின் சுவை அவர்களை குருடாக்கியுள்ளது. சிபிஐ(எம்) கட்சியின் மார்க்சியமல்லாத இடதுசாரித்தனம் இல்லாத அணுகுமுறையாலும் நடத்தையாலும் அவர்களால் இதை புரிந்து கொள்ள முடியவில்லை. இதன் காரணமாகத்தான் ஒரு உன்னத தத்துவமான மார்க்சிசம்–லெனினிசம் மக்கள் முன்பு குறிப்பிடத்தகுந்த அளவு மதிப்பிழந்துள்ளது. சிபிஐ(எம்)க்கும் பிற பூர்ஷ்வா ஓட்டுக் கட்சிகளுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தையும் மக்களால் காணமுடியவில்லை. கௌரவத்திற்கும் போற்றுதலுக்குமுரிய இடத்தில் வைத்துப் பார்க்கப்பட வேண்டிய "காம்ரேட்" என்ற வார்த்தைக் கூட ஏளனத்திற்குள்ளாகியிருக்கிறது.

சிபிஐ(எம்)யின் தலைமை மற்றும் அக்கட்சியின் உருவாக்கம் மற்றும் மனஅமைப்பின் காரணமாகத்தான் ஒரு ஓட்டுக்கட்சியாக அக்கட்சி தற்போது தோற்றமளிக்கிறது. ஓட்டு மற்றும் தேர்தல் வெற்றியைப் பொறுத்துத்தான் அக்கட்சியின் பலமும் வீழ்ச்சியும் இருக்கிறது. எனவேதான், முதலில் 2009 பாராளுமன்ற தேர்தல் துவங்கி, 2011 சட்டமன்ற தேர்தலில் அதன் ஆட்சி தூக்கியெறியப்பட்டு, சமீபத்திய பாராளுமன்ற தேர்தலில் சுத்தமாக துடைத்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# பெண்களுக்கு எதிராகப் பெருகிவரும் தாக்குதல்கள்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

காவல்நிலையத்திற்குள்ளேயே தன்னை பாலியல் ரீதியாகத் தாக்கியதாகக் புகார் தெரிவித்துள்ளார். ஆனால் உத்திரப்பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ் இதற்கெல்லாம் கொஞ்சமும் கலங்கவில்லை. 'பத்வான் போன்ற சம்பவங்களை கூகுள் தேடு பொறி மற்ற பகுதிகளுக்கும் கொண்டு சென்றுள்ளது' என்று கொஞ்சமும் கூச்சமின்றி அவர் பேசியுள்ளார். அதுமட்டுமல்ல, ஊடகங்கள் இதை ஊதிப் பெரிதாக்குகின்றன! என்று ஊடகங்கள் மீதும் பாய்ந்துள்ளார். அவருடைய தந்தை முலாயம் சிங் யாதவ், தனது தேர்தல் பிரச்சாரத்திலேயே 'பையன்கள் பையன்கள்தான், அவர்கள் தவறுகள் செய்யத்தான் செய்வர், அதற்காக அவர்களைத் தூக்கிலிட முடியாது' என்று கொஞ்சமும் பொறுப்பற்ற முறையில் பேசினார். அவர்கள் ஆளக்கூடிய மாநிலத்தில் பாலியல் பலாத்கார சம்பவங்கள் பல்கிப் பெருகி வருகின்றன. பத்வான் சம்பவம் நடைபெற்று சரியாக இரண்டு வாரங்களுக்குப் பின்பு பஹ்ரியாக் மாவட்டத்தில் அதேபோன்று ஒருபெண் கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு மரத்தில் பிணமாக தொங்கவிடப்பட்டிருந்தார். ஒரு குழந்தை பாலியல் பலாத்காரச் சம்பவம் உட்பட மேலும் பல பாலியல் வன்முறை மற்றும் கொலைச் சம்பவங்கள் உத்திரப்பிரதேசத்தில் வந்த வண்ணம் உள்ளன.

மேகாலயாவில் உள்ள ராஜா கொஎரா ரங்கட் பகுதியில் ஜோஸ்பினா சங்மாவிற்கு நேர்ந்த கொடூரம் ரத்தத்தை உறையவைக்கிறது. தன்னைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்ததை எதிர்த்ததால் ஏ.கே. 47 துப்பாக்கியால் சுடப்பட்டு தலை துண்டிக்கப்பட்டாள்.

ஹரியானாவில் உள்ள கைத்தால் பகுதியில் 17 வயது இளம் பெண்ணைக் கடத்தி அவரை ஒரு இளைஞன் பாலியல் பலாத்காரம் செய்துள்ளான். ஹரியாணாவில் உள்ள சிர்ஷா பகுதியில் உள்ள 22 வயது இளம்பெண்ணை பா.ஜ.க. வைச் சேர்ந்த மத்திய அமைச்சர் பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பஞ்சாபில் உள்ள மோகா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் புதிதாகத் திருமணமான 22 வயது பெண் அவரது தூரத்து உறவினரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார் என்று காவல்துறை கூறியுள்ளது.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்பூரில் 32 வயது பெண் கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். ராஜஸ்தானில் உள்ள கோட்டாவில் திருமணமான 22 வயதுப் பெண் அவரது கணவர் வீட்டில் இல்லாத சமயத்தில் பக்கத்து வீட்டுக்காரனால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார்.

மற்றொரு அதிர்ச்சி அளிக்கும் சம்பவத்தில், அகமதாபாத்தில் 17 வயது சிறுவன் அருகில் உள்ள பகுதியைச் சேர்ந்த 5 வயது பச்சிழம் குழந்தையை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேற்கு வங்க மாநிலம் பிர்பும் மாவட்டத்தில் 6ஆம் வகுப்பு மாணவியை அதே பள்ளியைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.

நாடு முழுவதிலும் வரக்கூடிய இச் செய்திகளுக்கு தமிழ்நாடும் விதிவிலக்கல்ல. 2012யில் தூத்துக்குடியில் பள்ளிக்குச் சென்ற குழந்தை பாலியல் பலாத்காரம் செய்து கொல்லப்பட்டாள். ஆனால் இன்று வரை அந்த வழக்கிற்கு அரசாங்க தரப்பு வழக்கறிஞர் நியமிக்கப்படவில்லை என்ற அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன. காதலிக்க மறுத்ததற்காக விநோதினி மீது கொடியவன் ஒருவன் ஆசிட் வீசினான். சென்னை சிறுசேரியிலுள்ள சிப்காட்டின் ஐ.டி. நிறுவனத்தில் உமா மகேஸ்வரி என்ற சாஃப்ட்வேர் இன்ஜினியர் வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருந்தபோது அவ்வாளகத்திற்குள்ளேயே கொலை செய்யப்பட்டார். பொள்ளாச்சியில் ஒரு தனியார் மாணவியர் விடுதியில் தங்கிப் படித்துவந்த 10 மற்றும் 11 வயது இரண்டு மைனர் பெண் குழந்தைகள் அருகில் உள்ள பகுதியைச் சேர்ந்த இருவரால் கடத்தப்பட்டு, கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். கரூர் அருகே ஒரு இளம் பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றிரண்டு மாதங்களுக்குள் நடைபெற்ற இந்த சம்பவங்கள் மக்கள் மத்தியில் மிகுந்த மனவேதனையையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன என்றால் சில அரசியல்வாதிகள் வெளியிட்ட பொறுப்பற்ற சிறுபிள்ளைத்தனமான அறிக்கைகள் அல்லது பேட்டிகள் எரிகின்ற தீயில் எண்ணையை ஊற்றுகின்றன. பாலியல் பலாத்காரம் போன்ற கொடிய குற்றங்களில் ஈடுபட்டவர்களை ஊக்கப்படுத்துவதுபோன்றும் அக்குற்றங்களை நியாயப்படுத்துவதுபோன்றும் அமைந்துள்ளன. மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பில் உள்ள மாநில உள்துறை அமைச்சர்களே இப்படிப்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். 'மனித அறநெறித்தரம் சீரழிந்துவிட்டது' எனவே பாலியல் வன்முறைகளைத் தடுக்கமுடியவில்லை என்று தங்களது இயலாமையை வெளிப்படுத்துகின்ற மகாராஷ்ட்ரா உள்துறை அமைச்சர் ஆர்.ஆர். பட்டில், ஒவ்வொரு வீட்டிலும் காவல்துறையை நியமித்தாலும் இவற்றைத் தடுக்க முடியாது என்று கூறியுள்ளார். 'பாலியல் பலாத்காரம் சில நேரங்களில் சரி, சில நேரங்களில் தவறு' என்று மத்தியப் பிரதேச பாஜக உள்துறை அமைச்சர் பாபுலால் கௌர் தெரிவித்துள்ளார். அதேபோன்று சத்தீஸ்கர் உள்துறை அமைச்சர் ராம்சேவக் பைக்ரா கூறியதாவது: யாரும் பாலியல் பலாத்காரத்தை வேண்டுமென்றே செய்வதில்லை, அது தவறுதலாக நடக்கிறது. பாலியல் வெறியும் பெண்ணிய வெறுப்பும் கலந்த அப்பட்டமான ஆணாதிக்க அணுகுமுறையல்லவா இது! இந்த அனைத்து அறிக்கைகளும் குற்றமிழைத்தவர்களை கண்டிப்பதற்கு மாறாக பாதிக்கப்பட்டவர்களையே குற்றம் சுமத்துகின்றன. கொஞ்சமும் மனித உணர்ச்சி இல்லாமல் வெட்கக்கேடான அமைச்சர்களும்–பூர்ஷ்வா அரசியல்வாதிகளும் இத்தகைய முட்டாள்தனமான வாதங்களை தொடர்ந்து ஓய்வொழிவின்றி கூறிவருகின்றனர்.

சமீப காலங்களில் பெண்கள் மீதான குரூரமான குற்றங்கள் உபியில் மட்டுமல்லாது இடதுசாரி இயக்கத்திற்குப் பெருமை சேர்த்த மேற்குவங்க மாநிலம் உள்ளிட்ட நாட்டின் பிற மாநிலங்களிலும் மூலை முடுக்குகள் எல்லாம் பெருகிவருவது மிகவும் வேதனை அளிக்கிறது. இது நாகரீக சமுதாயமா? 'உலகின் மிகப்பெரிய ஜனநாயக' நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடக்கிறதா இல்லை சட்டமில்லா ஆட்சி நடக்கிறதா? இதுபோன்ற காட்டுமிராண்டித்தனம் இன்னும் எத்தனை காலம் நீடிக்கும்? இந்த காட்டுமிராண்டித்தனத்தை எங்கே எப்படி முடிவு கட்டுவது? பெண்களின் கண்ணியம், பாதுகாப்பு, மற்றும் வாழ்வதையே அச்சுறுத்தும் மனிதத்தன்மையற்ற தாக்குதல்களைப் பார்க்கையில் இத்தகைய கேள்விகள் எல்லாம் தொடர்ந்து நம்மிடம் எழுகிறது? இத்தகைய சூழ்நிலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அதாவது சட்டமன்றங்களையும் பாராளுமன்றத்தையும் அலங்கரிக்கும் நமது 'மாண்புமிகு உறுப்பினர்கள்' எப்படிப்பட்ட அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றனர்? பல சம்பவங்களில் காவல்துறை மற்றும் நிர்வாகத்தின் பாத்திரம் கேள்விக்குறியதாகியுள்ளது. குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைப்பது இருக்கட்டும், அவர்கள் கைதுகூட செய்யப்படவில்லை. சில நேரங்களில் குற்றமிழைப்பவர்கள் சவடாலாகச் செல்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கு அதிகாரமிக்க அரசியல்வாதிகளின் செல்வாக்கு இருப்பதால். பல சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மைனர்களாகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த, பழங்குடியின இனத்தை அல்லது சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் குடும்பத்துப் பெண்களாக உள்ளனர், அதே வேளையில் குற்றமிழைப்பவர்கள், குறிப்பாக உ.பி. மற்றும் வட மாநிலங்களில் யாதவாக்கள், உயர் சாதியினர், ஜாட் இனத்தவர் சில சம்பவங்களில் சக்திவாய்ந்த அரசியல் அதிகாரத்தில் இருக்கும் குடும்பத்துப் பையன்களாக உள்ளனர். கற்பழிப்பு மற்றும் கொலைகளில் ஈடுபடும் குற்றவாளிகளைக் கைதுசெய்து இத்தகைய கொடூரமான குற்றங்களைத் தடுக்கத் தவறும் காவல்துறை மற்றும் நிர்வாகத்தை இதுபோன்ற அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆதரித்துக்கொண்டும் இப்படிப் பேசிக்கொண்டும் இருந்தால் இத்தகைய குற்றச் சம்பவங்கள் ஒரு போதும் குறையாதே! சட்டம் ஊமையாக உள்ளது, ஒழுங்கு உடைந்துபோய்விட்டது. நீதி தேவதை கதறி அழுகிறாள், நீதி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. சதைவெறி – காட்டுமிராண்டித்தனத்தின் வேகம் இவ்வாறுள்ளது!

2012 டிசம்பரில் டெல்லியில் நிர்பயாவிற்கு நேர்ந்த கொடுமை நாடு முழுவதிலுமுள்ள மக்களின் மனசாட்சியைத் தட்டி எழுப்பியது. மக்கள், குறிப்பாக இளைஞர்களும் பெண்களும் நல்லெண்ணம் படைத்த அறிவுஜீவிகளும் அணி அணியாய்த் திரண்டு வீதிகளில் குதித்தனர். இத்தகைய குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய, மாநில அரசாங்கங்கங்கள் முழுமனதோடு உறுதியான




**பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கண்டித்து கொல்கத்தாவில் பேரணி**

நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இக்குற்றங்களின் பின்னணி, இவற்றிற்கான காரணங்கள், இவற்றைத் தடுப்பது எப்படி என்பது குறித்த விவாதங்கள் மக்களிடையே ஓரளவு எழுந்தது. அப்போராட்டத்தின் நிர்ப்பந்தத்தால் அந்த சம்பவ வழக்கு விரைந்து விசாரிக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, மத்திய அரசாங்கம், நீதிபதி வர்மா குழுவை நியமித்து, இக்குற்றங்களைத் தடுப்பதற்கு, சட்டரீதியாகச் செய்ய வேண்டிய திருத்தங்கள் குறித்து அரசாங்கத்திற்கு அறிக்கை தருமாறு கேட்டுக்கொண்டது. வர்மா கமிட்டியும் சரியாக 30 நாட்களில் தனது வரலாற்றுச் சிறப்புமிக்க அறிக்கையை வழங்கியது. ஆனால் அவற்றின் பரிந்துரைகள் குப்பைத் தொட்டியில் போடப்பட்டுவிட்டன. அதுமட்டுமல்ல நாம் மேலே குறிப்பிட்ட சம்பவங்களின் மூலம், இக்குற்றங்கள் குறைந்தபாடில்லை, தொடர்ந்து பல்கிப் பெருகிவருகின்றன. பெண்கள் மீதான தாக்குதல்கள் உடல் ரீதியாக மட்டும் பெருகவில்லை, குண ரீதியான தாக்குதல்களும் பெருகிவருகின்றன. பெண்கள் சக மனிதர்களாக அல்லாமல் அவர்கள் ஒரு பொருளாகக் கருதப்படுவது அதிகரிக்கிறது. ஊடகங்கள், சினிமாக்கள், இணையதளங்களில் பெண்கள் மிக மோசமாக ஆபாசமாகச் சித்தரிக்கப்படுகின்றனர். அதோடு இக்குற்றங்களுக்கு பெண்களே காரணம் என்ற கருத்தையும் பரப்புவது தொடர்கிறது. உதாரணத்திற்கு, நிர்பயா விவகாரத்தில் அவர் ஏன் இரவில் பயணம் செய்தார் என்ற கேள்வியை எழுப்புகின்றனர். இன்றைய மாறி வரும் உலகில் நமது குழந்தைகள் வீட்டைவிட்டு வெகுதூரம், ஏன் வேறு மாநிலங்களுக்கும், சென்று படிக்கின்றனர், வேலை செய்கின்றனர். இரவிலும் பணியாற்றுகின்றனர். தங்களது வீடுகளுக்குச் செல்லும்போது வேறு வழியே இன்றி இரவில்தானே பயணிக்க வேண்டும். அப்படியானால் இரவில் பயணம் செய்தால் பெண்களுக்குப் பாதுகாப்புக் கிடையாதா? அல்லது பாதுகாப்புக் கொடுக்கக்கூடாதா? அது மட்டுமல்ல பட்டப்பகலில் வேலைக்குச் செல்லும் பெண்கள், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள், வீட்டில் தனியே இருக்கும் பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனரே அது ஏன்? மற்றொருபுறம், பெண்களுடைய ஆடைகளும் இப்படிப்பட்ட பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் என்றும் சிலர் குற்றம் சாட்டுகின்றனர். அப்படியானால் சீருடையோடு பள்ளிக்குச் செல்லும் பச்சிளம் குழந்தையும் பலியாகிறதே, அதற்கு என்ன காரணம்? உண்மையில் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் குற்றவாளிகளின் செயலை நியாயப்படுத்துவதோடு, பலியானவர்களையே குற்றம் சுமத்துகிறது. இது குற்றத்திலும் பெரும் குற்றமாகும்.

மதுபோதைக் கலாச்சாரம் பெருகிவருவது மிகுந்த கவலை அளிக்கும் விஷயமாகும். குற்றச் செயல்களில், குறிப்பாக பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைக் குற்றங்களில் ஈடுபடக்கூடியவர்கள் பெரும்பாலும் மதுபோதையில் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அப்படியானால் குற்றங்களை குறைப்பதற்காக ஒரு உண்மையான மக்கள் நல அரசாங்கம், மது போதைப் பொருட்களை தடை செய்யவேண்டுமல்லாவா? ஆனால் இங்கு அரசாங்கமே மதுபானக் கடைகளை நடத்துவதோடு, குக்கிராமங்கள் வரை அந்த வியாபாரத்தை பெருக்கி லாபமீட்ட முயற்சிப்பது கேட்டிலும் கேடான வெட்கங்கெட்ட செயல் இல்லையா? அரசாங்கமே இக்குற்றங்களைத் தூண்டுகிறது என்பதுதானே இதன் பொருள், இல்லையா? உண்மையில் அரசாங்கமே நாட்டின் வருங்காலத் தூண்களை, இளைஞர்களை, மாணவர்களை ஒரு நல்ல குடிமக்களாக உருவாக்குவதற்கு எதிராக சமூகக் குற்றவாளிகளாக உருவாக்கி வருகிறது. அது மட்டுமல்ல சினிமாக்களில் மதுபோதைப் பழக்கங்கள், பெண்களை கேலி மற்றும் அவதூறாகப் பேசும்

தொடர்ச்சி 8ம் பக்கம்

# தோழர் ஜலாலுதீன் அவர்களுக்கு செவ்வணக்கம்

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் கேரள மாநிலக் கமிட்டியின் மூத்த உறுப்பினரும் நமது தொழிற்சங்கமாகிய அகில இந்திய யுடியுசியின் கேரள மாநிலக் கமிட்டியின் துணைத்தலைவருமான தோழர் ஜலாலுதீன் அவர்கள் ஒரு இரு சக்கர வாகன விபத்தின் காரணமாக ஜுன் **19, 2014** அன்று இரவு **9.45** மணிக்கு திருவனந்தபுரத்தில் மரணமடைந்தார். அவருக்கு வயது **67**.

தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனைகளால் உத்வேகமூட்டப்பட்டு **1960**களின் இறுதியில் கேரளத்தில் கட்சியை கட்டியமைக்க முன்வந்த கொல்லம் பொறியியற் கல்லூரியிலிருந்து வந்த முதல் அணியில் ஒருவராவார் தோழர் ஜலாலுதீன். தொழிலாளிவர்க்கத்திற்காகவும் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சி எனும் பாதையில் லட்சக் கணக்கான அடித்தட்டு மக்களை அணிதிரட்டவும் அர்ப்பணித்துக்கொள்ளும் உன்னத வழியான தோழர் சிப்தாஸ் கோஷின் வாழ்க்கை மற்றும் போதனைகளை புரிந்துகொண்ட உடனேயே பழைய வாழ்க்கை முறையை உதறித்தள்ளி, கட்சியை கட்டியமைக்க முழுநேர அமைப்பாளராக உருவாவதற்கான கடமையை எடுத்துக்கொண்டார் அவர்.

பல்வேறு சவால்களையும் உயிருக்கே அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய கடினமான நிலைமைகளையும் எதிர்கொள்வதில் அச்சமின்றி துணிச்சலுடன் அவற்றை எதிர்கொண்டார். எமர்ஜென்ஸியின்போது அவர் பணிபுரிந்த தனியார் தொழில்நுட்ப கல்வி நிலைய உரிமையாளரின் தூண்டுதலின்பேரில் போலீஸ் காவலில் எடுத்துச் செல்லப்பட்டு பலநாட்கள் ரகசியமாக சிறை வைக்கப்பட்டார். அக்கல்விநிலையத்தில் நியாயமான சில கோரிக்கைகளை எழுப்பிய ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை அணிதிரட்டியதற்கு பழிவாங்குவதற்காக அவ்வுரிமையாளர் இந்நடவடிக்கையை மேற்கொண்டார்.

கட்சி அவரை பணித்தபடி அகில இந்திய யுடியுசி தலைமையின்கீழ் பல முறைசார்ந்த மற்றும் முறைசாரா தொழிற்சாலைகளில் பல்வேறு இயக்கங்களை முழுமனதுடன் சிறப்பாக மேற்கொண்டார். தோழர் சிப்தாஸ் கோஷ் காட்டியபடி இத்தருணத்தின் அவசர தேவையாக இருக்கக்கூடிய நாடு முழுவதும் சக்திவாய்ந்த நீண்டநெடிய தொழிலாளிவர்க்க இயக்கங்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் நேஷனல் கேம்பைன் கமிட்டி, ஸ்பான்சரிங் கமிட்டி மற்றும் மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு விடுத்த பல்வேறு கூட்டு தொழிற்சங்க இயக்கங்களிலும் திறம்பட தன் பங்கை ஆற்றியுள்ளார். இவ்வாறு அவர் பல்வேறு கட்சிகளின் கீழுள்ள தொழிற்சங்கத் தலைவர்களின் மிகுந்த மதிப்பையும் மரியாதையையும் பெற்றார்.

சில காலம் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் கொல்லம் மாவட்ட செயலாளராகவும் பணியாற்றினார். அவர் ஏஐயுடியுசியின் அகில இந்திய துணைத் தலைவர்களில் ஒருவராக நீண்ட காலம் இருந்தார். விபத்து ஏற்பட்ட ஜுன் **12** அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தோழர் ஜலாலுதீன் அவர்களுக்கு தலைக்காயம் மற்றும் உள் இரத்த கசிவிற்காக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவரது உயிரை காக்க டாக்டர்கள் எவ்வளவோ முயன்றும் அவருக்கு ஏற்பட்ட காயத்தினாலும் ஏற்கெனவே பல சிக்கலான நோய்கள் இருந்ததின் காரணமாகவும் அவரை காப்பாற்ற முடியவில்லை.

கட்சியின் மத்தியக்கமிட்டி, மாநிலக் கமிட்டி, மாவட்ட கமிட்டிகள் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களின் சார்பாக அவரது உடலுக்கு செம்பதாகைகள் போர்த்தப்பட்டது.

அவருக்கு அஞ்சலி செலுத்த அரசியல் கட்சித் தலைவர்கள் உட்பட வாழ்வின் அனைத்துத்தரப்பு மக்களும் வந்திருந்தனர். கட்சித் தோழர்கள், ஆதரவாளர்கள் உட்பட ஏராளமான மக்கள் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று இடுகாட்டிற்கு வந்தனர். துக்கம் நிறைந்த நெஞ்சத்தோடு அத்தோழருக்கு செவ்வணக்கம் செலுத்தினர்.

அகில இந்திய யுடியுசியின் பொதுச் செயலாளர் தோழர் சங்கர் சாஹா அவர்கள் தனது அனுதாபச் செய்தியில் தோழர் ஜலாலுதீன் அவர்களின் அகால மரணம் குறித்து ஆழ்ந்த



துக்கத்தையும் துயரத்தையும் வெளியிட்டிருந்தார். தொழிலாளிவர்க்க இயக்கத்தில் ஈடுபட்டதன் மூலம் மாநிலத்தின் தலைவர்களில் ஒருவராக தன்னைதானே அவர் தரமுயர்த்திக்கொண்டார் எனவும் அச்செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

**1987**யில் சோவியத் யூனியனுக்கு சென்ற தொழிற்சங்க பிரதிநிதிகள் குழுவில் அவரும் ஒருவர். **1992**லிருந்து **16** வருடங்கள் நமது தொழிற்சங்கத்தின் அகில இந்திய துணைத்தலைவராகவும் இருந்தார். இச்சமயத்தின் போது இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பல்வேறு கமிட்டிகளில் அகில இந்திய யுடியுசியை பிரதிநிதித்துவப்படுத்தினார். தோழர் ஜலாலுதீன் அவர்களுக்கு செவ்வணக்கம்.

# சிபிஐ(எம்)யின் 34 ஆண்டு கால ஆட்சி இடதுசாரி இயக்கத்திற்கே ஓர் அவப்பெயர்

5ம் பக்கத் தொடர்ச்சி

தெறியப்பட்டு, சிபிஐ(எம்) என்ற பேரரசு ஒரு அட்டை வீட்டைப்போல் தரைமட்டமாகியுள்ளது. அரசாங்க அதிகாரம் இல்லாத நிலையில் திசைகாட்டி இல்லாத கப்பல் போல கட்சி செய்வதறியாது தள்ளாடுகிறது. ஆட்சியிலிருந்தபோது கிரிமினல்களும் சமூக விரோதிகளும் கட்சி உறுப்பினராவதற்கு முண்டியடித்தனர். அவர்களுக்கு உறுப்பினர் அந்தஸ்தை கொடுத்த கட்சியும் தேர்தலெனும் இருண்ட அபாயகரமான ஆற்றைக்கடப்பதற்காக மோசடிகளில் ஈடுபடுவதற்கும் எல்லோரையும் மிரட்டிப்பணிய வைப்பதற்கும் பயன்படுத்திக்கொண்டது. தற்போது அதிகாரம் இழந்த நிலையில் இவர்கள் வந்ததைப் போலவே கும்பல் கும்பலாக கட்சியிலிருந்து வெளியேறிவிட்டனர். தற்போது ஆட்சியிலுள்ள திரிணாமூல் காங்கிரசில் உறுப்பினராவதற்கும் சமீப காலமாக பாஜகவில் உறுப்பினராவதற்கும் சென்றுவிட்டனர்.

தங்களுடைய கட்சியிலும் தங்களுடைய மாணவர் இளைஞர் அமைப்புகளிலும் சில பத்து லட்சக்கணக்கில் உறுப்பினர்கள் இருப்பதாக பெருமை பீற்றிக்கொள்வர். ஆனால் ஆளும் திரிணாமூல் காங்கிரஸ் அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கத் துவங்கிய பிறகு இந்த பத்து லட்சக் கணக்கான உறுப்பினர்களின் இதயத்திலிருந்து கட்சி காணாமற்போய்விட்டது. உயிருக்கும் உடைமைக்கும் பயந்து சிபிஐ(எம்) தொண்டர்கள் பலர் வலதுசாரி திரிணாமூல் காங்கிரசிலும் அதீத வலதுசாரி வெறிவாத பாரதீய ஜனதாவிலும் இணைகின்றனர். அதிகாரபூர்வ இடதுசாரி தாதாவுக்கு என்னே ஒரு சோக முடிவு? ஆளுங்கட்சியிடமிருந்து சலுகைகளையும் ஆதாயத்தையும் எதிர்பார்த்தே இவ்வாறு கட்சித்தாவலில் ஈடுபடுவதாக சி.பி.ஐ.(எம்)யின் மாவட்ட செயலாளர் ஒருவர் கூறினார். ஆக இது போன்று சலுகைகளுக்காகவும் ஆதாயத்துக்காகவும் உறுப்பினர்களாக இருந்தவர்களைக் கொண்டுதான் தனது ஸ்தாபன பலத்தை பற்றி இவ்வளவு நாளும் சிபிஐ(எம்) பீற்றிக்கொண்டிருந்தது என்பது தற்போது தெளிவாகிவிட்டது. தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிபெற்றுவருவதால் தாங்கள் செய்வதனைத்தும் சரியானதே என்று இவ்வளவு நாட்களும் சிபிஐ(எம்) தலைவர்கள் சொல்லிவந்தனர். தற்போது திரிணாமூல் காங்கிரசும் பாரதீய ஜனதாவும் ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து வெற்றி ஈட்டிக்கொண்டிருக்கும் நிலையில் சிபிஐ(எம்)யின் தர்க்கத்தை வைத்துப்பார்த்தால் திரிணாமூலும் பாரதீய ஜனதாவும் செய்வதெல்லாம் சரியே என்ற முடிவிற்கு வர முடியுமா?

### நேர்மையான சிபிஐ(எம்) தொண்டர்களுக்கு தோழமையுடன் ஒரு வேண்டுகோள்

இதுகாறும் சிபிஐ(எம்) நடத்திவந்த இடதுசாரி அரசியல் இதுவே. பலமுறை எமது கட்சி இவற்றையெல்லாம் சிபிஐ(எம்) தொண்டர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளது. எங்கள் கட்சி மீது சிபிஐ(எம்) கொலைவெறித்தாக்குதல் நடத்திக்கொண்டு 150க்கும் மேற்பட்ட எங்களது தொண்டர்களையும் தலைவர்களையும் கொன்றுகுவித்து எங்களது தலைவர்கள் முன்னணி தோழர்கள் பலரை பொய்வழக்குகளை ஜோடித்து சிறைக்கனுப்பிக்கொண்டிருந்தபோது நாங்கள் திரும்பத்திரும்ப சி.பி.ஐ.(எம்) தொண்டர்களுக்கு அறைகூவல் விடுத்துக்கொண்டிருந்தோம். இந்த வன்முறை அராஜக அரசியலும் தன்னை தாதாவாகக் காட்டிக்கொண்டு மிரட்டுவதும் எங்கே போய் முடியும் என்று சிந்திக்குமாறு திரும்பத்திரும்ப கோரினோம். ஒரு முதலாளித்துவ அமைப்புமுறையில் ஆட்சிபுரிவதற்கான வாய்ப்பு கிடைக்கும்பட்சத்தில் அதுவே இறுதி லட்சியம்போல எப்படியேனும் ஆட்சியில் நீடித்துக்கொண்டு மக்களை பாராளுமன்ற மாயைக்குள் வைத்திருப்பதற்கு ஒரு உண்மையான புரட்சிகர கட்சி முயலுமா என்ற கேள்வியின்பால் சிபிஐ(எம்) தொண்டர்களின் கவனத்தை பலமுறை ஈர்த்தோம். அதிகாரத்தில் நீடித்திருக்க வேண்டும் என்பதற்காக அக்கட்சி வர்க்க வெகுஜன இயக்கங்களை கைவிடலாமா? இத்தகைய கட்சியை இடதுசாரி கட்சி என்று அழைக்க தகுதிபெறுமா?

ஒரு புரட்சிகர கட்சி முதலாளித்துவ அமைப்பு முறைக்குள் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் நிலையில் தனது அரசாங்க அதிகாரத்தின் உதவியோடு போலீஸ் மற்றும் நிர்வாகத்தின் தலையீடுகளை தடுத்து வர்க்க வெகுஜன இயக்கங்கள் பெருகுவதற்கு அனைத்து வகையிலும் ஊக்குவிக்கும். மார்க்சிசத்தின் சரியான புரிதலின் அடிப்படையில் எமது ஆசானும் வழிகாட்டியும் கட்சி நிறுவனருமான தோழர் சிப்தாஸ் கோஷ் இது தொடர்பாக மிகச்சரியான பருண்மையான வழிகாட்டுதல்கள் அளித்துள்ளார்.

இக்கேள்விகளையும் விஷயங்களையும் ஆழமாக சிந்திக்காமல் பகுத்தறிவு தர்க்கவியல் சரியான மார்க்சிய அணுகுமுறை மற்றும் செயல்முறையியல் ஆகியவற்றின் வெளிச்சத்தில் இவற்றை ஆராயாமல் ஒரு சில தலைவர்களை பதவியிறக்கிவிட்டு புதிதாக தலைவர்களை நியமிப்பதால் மட்டும் நேர்மையான சிபிஐ(எம்) தொண்டர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறிவிடுமா? தலைமை மிகவும் முக்கியமானதுதான். கட்சியை நடத்துவதும் வழிகாட்டுவதும் தலைவர்கள்தான். ஆனால் கட்சியின் அடிப்படை கட்டமைப்பு, சிந்தனை முறை, அணுகுமுறையியல், தத்துவம், கலாச்சாரம், வாழ்க்கை முறை இவை எல்லாவற்றிற்கும் மேலாக சரியான சித்தாந்தம் ஆகியவற்றிலிருந்து கட்சித்தலைமையை தனிமைப்படுத்தி பார்க்க முடியுமா? இன்னமும் இடதுசாரி வாதத்தின்பால் பற்றுடன் இருக்கின்ற சிபிஐ(எம்)யின் நேர்மையான தொண்டர்கள் இடதுசாரி ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுத்து அதற்கு ஸ்திரமான அடித்தளம் அமைக்கவேண்டும் என்று விரும்பும் தொண்டர்கள் மேலே விவரிக்கப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து ஆழமாகவும் சிரத்தையுடனும் சிந்திக்க வேண்டுமாய் தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**ஆகஸ்ட் 5**

**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்**

**சிப்தாஸ் கோஷ்**

**38வது நினைவு தினம் அனுஷ்டிப்போம்**

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 28th July 2014

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2012-14
WPP Licence No:TNCCN/153/2012-14
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# தோழர் யாகூப் பைலான் மக்கள் மனங்களில் என்றென்றும் வாழ்வார்

*2ம் பக்கத் தொடர்ச்சி*

வகுத்து வந்தனர். துக்கம் தொண்டையை அடைக்க மௌனமாக நடந்த அந்த ஊர்வலத்தில் சர்வதேச பண்ணும் தோழர் சிப்தாஸ் கோஷ் மீதான பாடலும் மாறி மாறி ஒலிக்கப்பட்டன. இடையில் கட்சியின் தொழிற்சங்கமான அகில இந்திய யுடியுசி அலுவலக வாயிலில் ஊர்வலம் நிறுத்தப்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்களும் தொழிற்சங்க தோழர்களும் தோழருக்கு மரியாதையும் மலரஞ்சலியும் செலுத்தினர். மௌலாலி சந்திப்பில் ஊர்வலம் முடிவுற்றது. அங்கிருந்து தோழர் யாகூப் பைலான் பல்வேறு மக்கள் இயக்கங்களையும் விவசாயிகள் போராட்டங்களையும் நடத்திய தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தின் தலைநகரான ஜாய்நகர் கட்சி அலுவலகத்திற்கு அரவது உடல் எடுத்துச்செல்லப்பட்டது.

ஜாய்நகர் கட்சி அலுவலகத்தை அவரது உடல் வந்தடைந்தபோது பிற்பகலாகிவிட்டது. தங்களுடைய அன்பிற்குரிய தலைவரை இறுதியாக ஒருமுறை தரிசித்து அவருக்கு தங்களது இதயங்கனிந்த மரியாதை செலுத்துவதற்காக கட்சித்தொண்டர்களும் ஆதரவாளர்களும் அனுதாபிகளும் கட்சியை நேசிக்கக் கூடியவர்களும் ஆயிரக்கணக்கில் நீண்ட நேரம் கட்டுக்கோப்பு ஒழுங்கோடு காத்திருந்தனர். தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தில் முதன் முதலில் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையை பரப்பியவர் தோழர் சச்சின் பானர்ஜி ஆவார். பின்னர் அவரோடு தோழர் சுபோத் பானர்ஜி இணைந்துகொண்டார். அவர்கள் இருவரின் தலைமையின் கீழும் வழிகாட்டுதலின் கீழும் தோழர் யாகூப் பைலான் அவர்களும் துடிப்பும் தைரியமும் கொண்ட மேலும் சில இளைஞர்களும் சேர்ந்து இரத்தம் தோய்ந்த பல போராட்டங்கள் மூலமாகவும் தியாகங்கள் மூலமாகவும் அம்மாவட்டம் முழுவதிலும் கட்சிக்கான அடித்தளங்களை உருவாக்கினர். எனவே சுந்தரவன பகுதியின் மிக உட்புற கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகள் மீது மட்டுமின்றி ஜாய்நகர் நகரத்தின் படித்த மத்தியதர வர்க்கத்தினரிடையேகூட அவரது செல்வாக்கு இருந்தது.

மறைந்த தோழரின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்த வந்திருந்தோரில் குல்தலியை சேர்ந்த பெண் மீனவர்கள் ஜாய்நகரின் பிரபல மருத்துவர்கள் மக்ரஹட் நகரைச்சேரந்த 80 வயதைத் தாண்டிய முதியவர்களும் சங்கர்புரின் நடுத்தர வயது விவசாய தொழிலாளிகளும் அடங்குவர். எல்லா இன்னல்களையும் எல்லா தடைகளையும் கடந்து ஏழை விவசாயிகளையும் உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி போராட்டங்கள் நடத்துவதற்கு தோழர் யாகூப் பைலான் எப்படிப்பட்ட முன்மாதிரியான சிறந்த போராட்டங்களை நடத்தினார் என்று வந்திருந்தோரில் பலரும் கூறினர்.

புரட்சிகர போராட்டங்களில் அவருடன் தோளோடு தோள் கொடுத்தவர்களாகிய தோழர் சுதிர் பானர்ஜியும் தோழர் நளினி ப்ரமானிக்கும் முதற்கண் அவரது உடலுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அவர்களை தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கட்சியின் மாவட்ட செயலாளரான தோழர் சுஜன் சக்ரவர்த்தி, வட்டச்செயலாளரான தோழர் ஜோகேஷ் கோஷ், புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் தோழர் சந்திரசேகர் தேவ்நாத் ஜாய்நகர் குல்தலியின் த்ரிணாமூல் காங்கிரஸ் கன்வீனரான திரு கௌர சர்க்கார், ஜாய்நகர் நகராட்சி தலைவரான திருமதி ஃபரீதா பேகம் ஷேக் முன்னாள் நகர மன்றத்தலைவர் திரு ப்ரசாந்த சரக்கேல் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். கட்சியின் மாநில செயலாளர் தோழர் சௌமென் பாசு உட்பட கட்சியின் பல்வேறு தலைவர்களும் கூடியிருந்த ஏராளமான தொண்டர்களும் அவருக்கு மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து இறுதி யாத்திரை புறப்பட்டது. இதில் கட்சித் தொண்டர்கள் ஆதரவாளர்கள் அனுதாபிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். ஜாய்நகர் நகரம் முழுவதுமே அந்த ஊர்வலத்தில் திரண்டுவிட்டதோ என்று எண்ணுமளவிற்கு கூட்டம் அலைமோதியது. ஜாய்நகர் நகரம் முழுவதையும் சுற்றிய பிறகு மறைந்த தோழரின் சொந்த கிராமமான ஹஸன்புருக்கு அவரது பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு வெள்ளமென பெருக்கெடுத்த கண்ணீருக்கும் செவ்வணக்கங்களுக்கும் இடையே புதைக்கப்பட்டது.

மறைந்த தோழருக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக ஜூன் 22ம் தேதியன்று ஜாய்நகர் முனிசிபல் திடலில் நினைவஞ்சலி கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரான தோழர் தேவ பிரசாத் சர்க்கார் இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார். துக்கத்தல் பீடிக்கப்பட்ட மக்களுடைய கடல் அது. துக்கத்தால் பீடிக்கப்படினும் மிகவும் ஒழுங்கோடு கூடிய அக்கூட்டம் அனைவரையும் நெகிழ வைத்தது. பலர் மலரஞ்சலி செலுத்தினர். பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் அவரது உருவப்படத்திற்கு மலர் வளையம் வைத்தனர். தோழர்கள் பிரவாஸ் கோஷ், ரஞ்சித் தர், அசித் பட்டாச்சாரியா, சௌமென் பாசு, சங்கர் சாஹா மற்றும் பலர் அவரது உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். கம்சொமால் வாலன்டியர்களின் மரியாதை அணிவகுப்பிற்கு பிறகு மத்திய கமிட்டியின் இரங்கல் செய்தியை தோழர் தேவபிரசாத் சர்க்கார் வாசித்தார். அதைத் தொடர்ந்து மறைந்த தோழருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஒரு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. அதன்பிறகு தோழர் யாகூப் பைலான் அவர்களுடைய புரட்சிகர வாழ்க்கை மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளின் பல்வேறு அம்சங்களை தனது உணர்ச்சி ததும்பும் உரையில் தோழர் பிரவாஸ் கோஷ் விளக்கினார். கம்யூனிச சர்வதேசப் பண்ணிசையோடு கூட்டம் முடிவுற்றது. நிறைவுறாத கடமைகளையும் பணிகளையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியேற்றுக் கொண்டு தோழர்கள் கலைந்துசென்றனர். தோழர் யாகூப் பைலான் என்றென்றும் இவர்களது மனங்களில் நீங்கா இடம்பெற்றிருப்பார் என்பது உறுதியாகத் தெரிந்தது.

# பெண்களுக்கு எதிராகப் பெருகிவரும் குற்றங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவீர்

*6ம் பக்கத் தொடர்ச்சி*

செயல்கள் கதாநாயகப் பாத்திரங்கள் மூலம் போற்றப்படுகின்றன. இயற்கையாகவே இவற்றைப் பார்க்கின்ற இளைஞர்களின், குழந்தைகளின் மத்தியில் இப்படிப்பட்ட பழக்கங்கள் அவர்களை அறியாமலேயே திணிக்கப்படுகிறது. ஆனால் அரசாங்கமோ இவற்றைக் கண்டுகொள்ளாமல், சென்சார் செய்யாமல், இந்த சினிமாக்களுக்கு விருதுகளை அளித்து, இப்பழக்கங்களைத் தூண்டுவதற்குத் துணை போகிறது.

அரசியல் களத்திலும் பெண்கள் தாக்குதலுக்கு ஆளாவது மிகவும் அபாயகரமான அம்சமாகும். வெகுஜன இயக்கங்களின் போது பெண்கள் தாக்கப்படுவது தொடர்கிறது. சிங்கூர்– நந்திகிராம் போராட்டங்களில் பெண்கள் மீது அன்றைய சிபிஐ(எம்) தலைமையிலான இடதுசாரி முன்னணி அரசாங்கம் மேற்கொண்ட கடுமையான பாலியல் வன்முறைகளே அதற்குச் சாட்சி. பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உயர்மட்டத் தலைவர்கள்மீது பாலியல் வன்முறை உள்ளிட்ட கடுமையான குற்றச்சாட்டுகள் பதிவாகி வழக்குகள் நடைபெற்று வருகின்றன. ‘எங்கள் கட்சிப் பெண்கள் மீது தாக்குதல் நடத்தினால், சிபிஐ(எம்) கட்சியினரின் வீட்டுக்கு எனது ஆட்களை அனுப்பி அந்தவீட்டுப் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வேன்’ என்று சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. தபஸ் பால் பேசியது அரசியல் இயக்கங்களிலும் பெண்கள் எப்படிப் பலிகடா ஆக்கப்படுகின்றனர் என்பதற்கு உதாரணமாகும். ஆனால் இப்படிப் பேசியவர் மீது அக்கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜி, அவர் ஒரு பெண்ணாக இருந்தபோதிலும்கூட எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்துதான் பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்க, பெண்கள்மீது தொடுக்கப்பட்டுவரும் பெருகிவரும் பாலியல் வன்முறைகளைத் தடுக்கும் வழிமுறைகளைப் பற்றி பாராளுமன்றத்தில் பேசப் போகிறார்கள். இதுதான் இந்த நாட்டின் நிலைமை!

இத்தகைய சிந்தனைகள் எல்லாம் ஆணாதிக்க சமுதாயத்தின் வெளிப்பாடுகளே. பெண்களை இன்னமும் இரண்டாம்தரக் குடிமக்களாக எண்ணுவதால்தான் பெண்களை ஒரு பொருளாக, வியாபாரப் பொருளாக ஆக்க முயற்சிக்கும் சீரழிந்த முதலாளித்துவ சமுதாயத்தின் நடவடிக்கைகளாலேயே ஆகும். இப்படிப்பட்ட சூழலில் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு கடுமையான சட்டங்களை நிறைவேற்றி, அவற்றை பாரபட்சமின்றி அமல்படுத்தி, குற்றவாளிகளை விரைவாகக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அதேவேளையில் குற்றங்கள் நடைபெறுவதையே தடுப்பது மிகவும் முக்கியம். அதற்கு இன்று நிலவும் கேடுகெட்ட தன்னைச் சுற்றியே சிந்திக்கும், நுகர்வுக் கலாச்சாரத்திற்கு மாறாக ஒரு உயர்ந்த கலாச்சாரத்தை உயர்த்திப் பிடிக்கவேண்டும். பெண்களை சரிசமமாக, ஒரு சக மனிதனாக பார்க்க வேண்டும். ஆணுக்குக் குறைவில்லாதவர்கள் என்ற எண்ணத்தை குழந்தைப் பருவம் முதலே ஊட்டி வளர்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து சமூக–அரசியல்– கலாச்சார இயக்கங்களைக் கட்டி எழுப்பவேண்டும். ஈஸ்வர சந்திர வித்யாசாகர், ராஜாராம் மோகன்ராய், பாரதியார், நேதாஜி போன்ற பெண்களின் உரிமைகளுக்காகப் போராடிய மாபெரும் மனிதர்கள் உருவாகிய இந்த நாட்டில் மீண்டும் ஒரு உரிமைப் போராட்டத்தை நடத்த வேண்டும். அத்தகைய போராட்டங்கள் உயர்ந்த நீதிநெறி–அறநெறித் தரத்தின் அடிப்படையில் நடத்தவேண்டும். இப்படிப்பட்ட போராட்டங்களில் பொதுமக்கள் அணி அணியாகத் திரண்டு பாதிக்கப்பட்டவருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஆதரவாக நிற்கும் போது, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க நிர்பந்திக்கையில் வேறு வழியின்றி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்க வாய்ப்புள்ளது. அதே வேளையில் போராட்டத்தின் போக்கில் பெண்களின் கண்ணியத்தை, மேன்மையை உயர்த்திப் பிடித்து பெண்களை சமூகத்தின் வளர்ச்சியில் பங்கேற்றுள்ள சக மனிதர்கள் என்ற அந்தஸ்தை உத்திரவாதப் படுத்தவும் முடியும்.

இத்தருணத்தின் தேவையை சரியாக உணர்ந்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வெகுஜன அமைப்பான அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (ஏஐஎம்எஸ்எஸ்) தொடர்ச்சியாகப் பல்வேறு போராட்டங்களை நடத்திவருகிறது. சரியாகச் சிந்திக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து நாடு முழுவதும் பல்வேறு கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நடத்தி வருகிறது. இவற்றின்மூலம் பெண்களுக்கு எதிரான இத்தகைய கொடூரமான குற்றங்களுக்கு எதிரான கருத்தை பொதுமக்கள் மத்தியில் உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த இயக்கத்தில் சகோதர வெகுஜன இயக்கங்களான அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (ஏஐடிஎஸ்ஓ) மற்றும் அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கமும் (ஏஐடிஒய்ஓ) இணைந்து பணியாற்றி வருகின்றன. பெண்களின் நலனை உயர்த்திப் பிடிப்பதற்கான இந்த இயக்கங்களை வலுப்படுத்துவதற்கு பெண்கள் மீது நடத்தப்படும் குற்றங்களைக் கண்டு மனம் வெதும்பி வரும் மக்கள் அனைவரும் முன்வரவேண்டுமென அறைகூவல் விடுக்கிறோம்.

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in